விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 175

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசியல் தீர்வில் இந்தியா தலையிடாது

# ஆனால் அதை விரைவாகக் காணுங்கள்

## ஜனாதிபதியிடம் இந்திய உயர்மட்டக் குழு எடுத்துரைப்பு

(கொழும்பு)

**தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி விரைவாக அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு அரசிடம் இந்தியா வலியுறுத்திக் கூறியுள்ளது. அரசியல் தீர்வு விடயத்தில் தாம் தலையிடப்போவதில்லை என்றும் அது இலங்கையைப் பொறுத்தது என்றும் இந்தியா தெரிவித்துள்ளது.**

நேற்று முன்னதினம் கொழும்பு வந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையிலான இந்தியாவின் உயர்மட்டக் குழு நேற்று பிற்பகல் புதுடில்லி திரும்ப முன்னர் இந்திய ஊடகம் ஒன்றிடம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு வந்தவுடன் சிவ்சங்கர் மேனன் தலைமையிலான இந்திய உயர்மட்டக் குழுவினர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசுடன் மூடப்பட்ட அறையில் பேச்சுக்களை நடத்தினர்.

இதனையடுத்து நேற்று (19ஆம் பக்கம் பார்க்க)



## சாவகச்சேரியில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பெரியமாவடிச் சந்தியில் நேற்று மாலை 4.20 மணியளவில் இடம்பெற்ற கார்-மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, சாவகச்சேரி பெரியமாவடிச் சந்தியில் நேற்று மாலை 4.20 மணியளவில் வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் எதிரேவந்த காருடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பின்னிருந்து வந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூட்டமைப்பினருடனும் நேற்று இந்திய உயர்மட்டக் குழு சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய உயர்மட்டக் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பு காலை 10.30 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், மாவை.சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இவ்விரு தரப்பினருக்கும் இடையிலான இச் சந்திப்பில் வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித்தேவைகள் வடக்குக் கிழக்குக் காணி, வணக்க ஸ்தலங்கள், கலாசார விவகாரங்கள் தொடர்பாகவும் மற்றும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான அரசியல் தீர்வாக இருக்க வேண்டும் என இந்திய உயர்மட்டக் (20ஆம் பக்கம் பார்க்க)

## 13-ம் திருத்த சட்டத்திற்கு அப்பால் என்பது என்ன?

### கேள்வியெழுப்புகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு வழங்க இருப்பதாக கூறப்படும் 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பால் தீர்வு என்பது என்ன? என ஐக்கிய தேசிய கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனை தெரிவித்துள்ளார். 13ஆம் சட்டத்துக்கு அப்பால் சென்று அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு தீர்வு வழக்குமானால் அந்த தீர்வு என்னவென அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தியா (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் கொழும்பு வருவார்

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடக பிரிவு நேற்று அறிவித்துள்ளது.

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலாளர் நிரூபமா ராவ் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோரடங்கிய இந்திய உயர்மட்டக் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை இந்திய பிரதமர் ஏற்றுக் கொண்டமை தொடர்பான கடிதத்தை நேற்றுக் காலை ஜனாதிபதியிடம் கையளித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். (ச-5)

அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில்

நாளை முதல்

எண் சோதிடம்

வெளிவரும்.

புதிய ஆய்வுகளின் பகிர்வுகளை உள்ளடக்கிய அற்புதப் படைப்பு

## இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 6 மாத காலக்கெடு விதித்தது இந்தியா

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்குஇந்தியா ஆறுமாதகெடுவொன்றைவிதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வொன்றை வழங்குமாறு கோரியே இந்திய அரசாங்கம் பிரஸ்தாப ஆறுமாதக் கெடுவை விதித்துள்ளதாக மேலதிக தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த வெளிவிவகார அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மூலமாக இந்திய அரசாங்கம் தனது ஆறுமாதக் காலகெடு குறித்த தகவலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிபடைந்த பின் ஜனாதிபதி மேற்கொண்ட இந்தியப் பயணங்களின் போதெல்லாம் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள தயாராக இருப்பதாக வலியுறுத்தியிருந்தார்.

ஆயினும் அவர் வாக்குறுதி அளித்துள்ள தன் பிரகாரம் அதிகாரப்பரவலாக்கலுக்கான எந்தவொரு முயற்சியையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்ற நிலையிலேயே இந்தியா கடுப்புடன் நடந்துகொள்ள முயற்சிக்கின்றது.

அத்துடன் இந்தியாவுக்கு எதிராக அமைச்சர்கள் விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரின் செயற்பாடுகள் குறித்தும் இந்திய அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. (ந-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777.
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# விமானக் கழிவறையில் 71இலட்சம் ரூபாய்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திலுள்ள கழிவறை ஒன்றிலிருந்து 71 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுப் பண நோட்டுக்கள் அடங்கிய பை ஒன்று நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து விமானநிலையத்தின் சுத்திகரிப்பாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# இந்தியாவுக்கு எதிரான போரில் பாகிஸ்தானுக்கு இலங்கை உதவியது

## 40 ஆண்டு கடந்து நன்றி கூறப்படுகிறது

(கொழும்பு)

1971இல் இந்தியாவுக்கு எதிரான போரில் பாகிஸ்தானுக்கு எல்லா விதமான உதவிகளையும் வழங்கியதற்காக இலங்கைக்கு பாகிஸ்தான் நன்றி தெரிவித்துள்ளது.

இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு சென்றுள்ள நிலையிலேயே பாகிஸ்தான் நன்றி கூறியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை - பாகிஸ்தான் வர்த்தகசபையின் கூட்டத்தில் பேசியபோதே, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சீமா இலாகி பலோச் இவ்வாறு நன்றி கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் தூதுவர் இலாகி ப்லோச்,

நாங்கள் இலங்கையை நம்புகிறோம். இலங்கை தனது இறைமை விடயத்தில் விட்டுக்கொடுக்காமல் இருப்பதையிட்டு பெருமை கொள்கிறோம்.

எமது பிரதேசத்தில் நிலையான அமைதி ஏற்பட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

காஷ்மீர் விவகாரம் ஐ.நா. பிரகடனங்களின் அடிப்படையிலும், அங்குள்ள மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலும் அமைதியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

1971இல் இந்தியாவுக்கு எதிரானபோரின்போது இலங்கை செய்த உதவிகளை ஒரு போதும் மறக்க முடியாது.

பாகிஸ்தானிலிருந்து எம்மால் விநியோகங்கள் மற்றும் அரசியல் உதவியை வழங்க முடியாதபோது- இலங்கை உதவ முன்வந்தது.

தனது எரி பொருள் நிரப்பும் வசதிகளை எமக்காக திறந்துவிட்டது.

இலங்கை மக்களின் அமைதியான வாழ்வுக்கு உதவ பாகிஸ்தான் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

1971ஆம் ஆண்டு போரின் போது பாகிஸ் தானியப் போர் விமானங்கள் பண்டாரநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு சென்று கிழக்குப் பாகிஸ்தானில் (தற்போதைய பங்களாதேஷ்) தாக்குதல்களை மேற்கொண்டன.

இந்தியாவுக்கு மேலாக பாகிஸ்தான் போர் விமானங்கள் பறக்க முடியாததால்தான் இலங்கையை எரி பொருள் நிரப்பும் தளமாக பாகிஸ்தான் பயன்படுத்தியிருந்தது.

எரிபொருள் நிரப்ப பாகிஸ்தானுக்கு இடமளித்ததால் இந்திய- இலங்கை உறவுகளில் கசப்பான நிலை ஏற்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கி தனது கடனைத் தீர்த்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

**ASIAN COMPUTER EDUCATION**

WIN 60% ஸ்கொலர்ஷிப்



Exam on
June 18 சனி
June 19 ஞாயிறு
100% Practical Classes

- டிஜிட்டல் ப்ரீபிரஸ்
- ஓடியோ, வீடியோ எடிட்டிங்
- வெப் அனிமேஷன்
- கிராபிக்ஸ் டிசைன்
- 2D & 3D அனிமேஷன்
- விசுவல் எஃ(f)பக்ட்
- மாயா அனிமேஷன்
- கார்டூன் அனிமேஷன்
- இணைய வடிவமைப்பு
- மாஸ்டர் டிப்ளோமா

இலவச அனுமதிகளை எமது நிலையங்களில் பெற்றிடுங்கள்!

| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-3734088 | 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267 |
| --- | --- | --- |

# மரண அறிவித்தல்



## திருமதி நவரத்தினம் அன்னபூரணி

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் அன்னபூரணி (08.06.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை உருக்குமணி தம்பதியினரின் அன்பு மகளும், கந்தையா செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், நவரத்தினம் (ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும், மாலதி (அமரர்), வசந்தி (கனடா), சுகந்தி (பிரான்ஸ்), மனோரதி (யா/அருணோதயாக் கல்லூரி அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீபிரகாசன் (கனடா), குகதாசசிங்கம் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அமிலினி (கிளி/இராமநாதபுரம் ம.வி), லகிந்தன் (யா/மகாஜனக்கல்லூரி), புகழினி (யா/மகாஜனக் கல்லூரி), சகானா (கனடா), திவேந் (கனடா), சஜிந் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகராசாவின் அன்புச் சகோதரியும், காலம்சென்றவர்களான அன்னம்மா, கண்மணி மற்றும் இராசநாயகம், சின்னராசா, கனகரத்தினம், லலிதாம்பிகை, சந்திரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2011) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மணல்பிட்டி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சி.கணேசலிங்கம் (மருமகன்)
உதவிக் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி.

அம்மாள் கோவிலடி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
T.P:021 490 8087
(5160)

**சாரதி தேவை**

உயஸ் வான் செலுத்துவதற்கு சாரதி தேவை. (40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புக்கு:
0777431045
(5170)

**ஆங்கில ஆசிரியர் தேவை**

நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை (இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.
T.P: 0722238778
(5170)

**காணி விற்பனைக்கு**

2, 4, 5, 10 பரப்புகளில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0775026739
(5158)

**காணி விற்பனை**

அளவெட்டி தெற்கு, அருணாசலம் வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள ஒழுங்கையில் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0776116050
(5163)

**STUDY IN UK**

G.C.E. (O/L) மற்றும் G.C.E. (A/L) உடன் கற்கை நெறிகளைத் தொடரலாம்

- G.C.E. (O/L) சித்தியுடன் அடிப்படை ஆங்கில பாடநெறியினை தொடர்வதற்கு (IELTS) அவசியமில்லை (Student Visitor Visa)
- U.K இல் உயர் கல்வியினைத் தொடர்வதற்கு அடிப்படைத் தகைமைகளுடன் (IELTS) எதிர்பார்க்கப்படும்.
- நீங்கள் விரும்பும் பாடநெறிகளை உரிய முறையில் தொடரலாம்.
- இலகு தவணைக் கட்டண முறையுடன் 100% விசா உத்தரவாதம்.
- அனுமதிகள், ஆவணங்கள் மற்றும் ஆலோசனைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படும்.
- சகல ஆவணங்களும் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத் தரப்படும்.
- அத்துடன் Sponser ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
- மற்றும் யூரோப் நாடுகளுக்கான விசா ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

JULY SEPTEMBER INTAKE

PS CONSULTING (PVT) LTD,
STATION ROAD, KONDAVIL WEST, KONDAVIL, JAFFNA. T.P. 0778328290, 0755766786
(5168)

**வீடு விற்பனைக்கு**

வதிரிச் சந்திக்கு அருகாமையில், மந்திரிமடம், வதிரி கரவெட்டியில் 3 1/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
T.P.: 0213210549
(C-3400)

# கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் கணித பாட கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதால் இவ் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இப்பதவி வெற்றிடத்திற்கு வலிகாமம் வலயத்துக்கு உட்பட்ட ஆக குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடைய,குறிப்பிட்ட பாடத்தை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடை யபாடத் துறை)ஒரு பாடமாக கொண்டு பட்டம் பெற்ற இலங்கை ஆசிரியர் சேவைI அல்லது இலங் கை ஆசிரியர் சேவை 2-I ஐச் சேர்ந்தவர்க ளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இலங்கை ஆசிரியர் சேவை I உள்ள மற்றும் இலங்கை ஆசிரியர் 2-I உடன் சேவைக்கால ஆசிரியர் சேவை 2-I உடன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகியோ ருடமிருந்து பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை ஆசிரியர் சேவை2-I இலுள்ள ஆசிரியர்களிடமிருந்து தெரிவு மேற்கொ ள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்ப படிவங் கங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாம வலயக் கல்வி பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறி வித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஹேமலதா ஞாபகார்த்த விருது வழங்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சிறந்த கிராம அலுவ லர்களுக்கான ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறும் என யாழ். மாவ ட்டஅரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகு மார் அறிவித்துள்ளார்.

நவாலி சென் பீற்றர் விமானத் தாக் குதலில் சேவையின் போது உயிர் நீத்த நவாலியூர் ஹேமலதா செல்வராஜாவின் ஞாப கார்த்தமாக இவ்விருது வழங்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டுக்கான விருது நா ளை மறுதினம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்படும். யாழ். மாவட்ட த்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளி லிருந்து மிக வினைத்திறனாக சமூகத்திற்கு சேவையாற்றிய மூவர் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கிராம அதிகாரி களின் விபரம் வருமாறு, இ.பெ.மசனட் (உடு வில் பிரதேச செயலகம்)பா.லலித் (கரவெட்டி பிரதேச செயலகம்) கே.பூபாலசிங்கம் (தெல் லிப்பளை பிரதேச செயலகம்) (ந)

# வாரம் ஒரு தகவல்

## அதுதானே பார்த்தேன்!

"சமையல் வேலைகளில் மனைவிக்கு உதவியாக இருக்கிறது ஒரு கணவனோட கடமை என்கிறது என்னுடைய அபிப்பிராயம்!"

"இது உங்களுடைய அபிப்பிராயமாக இருக்க முடியாது என்கிறது என்னுடைய அபிப்பிராயம்!"

" என்ன இப்படி சொல்லிவிட்டாய்? இதோ பார்! நீ குளித்து விட்டு வருவதுக்குள் தக்காளியெல்லாம் வெட்டி வைத்துவிட்டேன்."

"அதுக்குள் என்ன அவசரம்?"

" பழங்கள் எல்லாம் ரொம்ப நேரத்துக்கு வைத்திருக்க கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம்."

எதுக்கெடுத்தாலும் அபிப்பிராயம்தானா?"

"உனக்கு ஒரு செய்தி தெரியுமா? அழுகாத பழங்களை உருவாக்க முடியும் போல் இருக்கு "

"பழங்கள் அழுகினால்தானே விதைகள் வெளியாகும். அப்போது தானே அடுத்த மரம் அல்லது செடி உண்டாகும்."

"நீ தாவரவியல் படித்து இருக்கிறாய்... அதனால்தான் இப்படி பேசுகிறாய்!பழங்கள் அழுகி சிதைவது செடிக்கும் மரத்துக்கும் சௌகரியம்! . அப்படி ஆகாமல் இருந்தால் அது நமக்கு சௌகரியம்!"

"சரி...அது எப்படி சாத்தியம்?"

"ஒரு காயோ கனியோ அழுகி வீணாக போவதற்கு சில ஜீன்கள் தான் காரணம்.அந்த ஜீன்களை முடக்கி வைத்து விட்டால் காய்கறிகளையும் பழங்களையும் ரொம்ப காலத்திற்கு சேமித்து வைக்கலாம்!"

"இப்படி எங்கேயாவது செய்து இருக்கிறார்களா?"

"கலிபோர்னியாவில் இருக்கின்ற கால்ஜீன்ங்கற உயிர் தொழில்நுட்ப நிறுவனம் இது மாதிரி அழுகவைக்கின்ற ஜீன்கள் முடக்கப்பட்ட தக்காளிச் செடியை உருவாக்கி இருக்கு!"

"இது எல்லாம் ரொம்ப நாளைக்கு கெட்டு போகாமல் இருக்குமா "

"ஆமாம்"

"இதே மாதிரி மூளை கெட்டுபோகாமல் இருப்பதற்கு ஒரு வழி கண்டுபிடித்தால் தேவையில்லை என்பது என்னோட அபிப்பிராயம்!"

" ஏன்..ஏன்... அப்படி சொல்கிறாய்."

இப்போ வெட்டிவைத்துக்கொண்டிருக்கிறீர்களே அது எல்லாம் தக்காளிப் பழமா?ந ல்லா பாருங்க! நம்ம குழந்தை விளையாடுவதற்காக வாங்கி வைத்திருந்த தக்காளிப்பழம் மாதிரியுள்ள -மெழுகுபொம்மை!"

"அதுதானே பார்த்தேன் வெட்டும் போது கஷ்டமாக இருந்தது.!"

"அப்பவே யோசிக்க வேண்டாமா"

"யோசித்தேன் சரியாக இல்லையே இது- என்று!"

"எது தக்காளியா?"

"இல்லே கத்தி!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மது போதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

மது போதையில் எவ்வித ஆவணங்கள் மற்றும் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தி சென்றதாக கச்சாய் வீதி கொடிகாமத்தை சேர்ந்த ஒருவரை சாவகச் சேரி பொலிஸார் நேற்று முன்தினம் சாவ கச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய் தனர்.

சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண் டமையையடுத்து குற்றவாளியாக கண்டு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்ததுடன் அபராதத்தை செலுத்த தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண் டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட் டார். (ஸ்ரீ-29)

# விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(அச்சுவேலி)

கலைமதி சனசமூக நிலையம், கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டுப் போட் டியும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 10 மணிக்கு ச.தவராசா தலைமையில் கலைமதி உதைபந்தாட்ட மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன், கௌரவ விருந்தினராக அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் சி.புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இன்று காலை 7 மணிக்கு ஆண்களுக்கான 10 மைல் மரதனோட்டமும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டமும் இடம் பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக காத்தவராஜன் சிந்து நடைக்கூத்தும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும். (ஸ்ரீ-70)

# ஆன்மீக நிகழ்வு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறும் விசேட உற்சவத்தில் அபிஷேகம்,அலங்காரம் , சுவாமிவலம் வருதல்,சமயப் பெரியார் களின் சொற்பொழிவு ஆகியவை நடைபெ ற்று வருகின்றன. (ஸ்ரீ-2)

# இராசி பலன்

12.06.2011
வைகாசி 29,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
ஏகாதசி முற்பகல்9.48 மணிவரை
சித்திரை காலை 6.19 மணிவரை
சுவாதி பின்னிரவு 4.51 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
ஏகாதசி விரதம்

**மேடம்** எடுத்த காரியம் கைகூடும்,உறவினர் வருகையுண்டு,பழைய நண்பர்களை சந்தித்து மகிழும் நாள்,விருந்து விழாக்களில் கலந்து மகிழும் நாள்.

**இடபம்** சுவாரஸ்மான நாள், போசன சுக முண்டு,மாற்றுக்கருத்துடையவர்கள் மனம் மாறுவர்,தொலைபேசி தக வல்கள் மகிழ்ச்சி தரும்,சிறு வரு மானங்கள் வந்து சேரும்.

**மிதுனம்** புத்திரர்வழியில் மகிழ்ச்சியடையும் நாள்,புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்,மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரும்.

**கடகம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும், சுபகாரிய பேச்சுக்கள் சுமுகமாக முடி யும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்,கருத்து வேறுபாடுகள் அக லும்,உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவி செய்வார்கள்.

**கன்னி** இனிய செய்திகள் இல்லம் தேடி வர லாம்,திறமைமிக்கவர்களின் ஒத்துழைப் போடுதொழில் முன்னேற்றம் காண் பீர்கள்,குடும்பத்தில் சுப நிகழ்வுகள் தோன்றுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**துலாம்** பயணத்தால் பலன் கிடைக்கும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், கொள்கைப்பிடிப்பை உறவினர்களுக்காக கொஞ்சம் தளர் த்த வேண்டி வரலாம்.

**விருச்சிகம்** தொழில் ரீதியாக சில பயணங்கள் ஏற்படலாம்,சுபகாரிய செய்திகள் ஏற்படும், சயனசுககுறையுண்டு, பணவரவு திருப்தி தரும்.

**தனுசு** பயணவாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், கௌரவம், அந்தஸ்துஉயரும்.பொருட்சேர்க்கை யுண்டு,பெருமையடைய வேண்டிய நாள்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெ றும்,நண்பர்கள் சந்திப்பால் மகிழ் ச்சியடைவீர்கள்,எதிர்பாரத உதவிகள் வந்து சேரும்,போசன சுகமுண்டு.

**கும்பம்** விருந்தினரை வரவேற்று வியப் படையும் நாள்,தொலைபேசி தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், தடை ப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**மீனம்** உறவினர்கள் உங்களின் செயற்பாடு களில் குறை . காணலாம்,எதிர்பாராத செலவுகள் ஏற்படும்,பிறரது வேலை களை நீங்களே எடுத்து செய்யும் சூழ்நிலை உருவாகும்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய்--+ | 60 | 60 | 60 |
| தக்காளி | 40 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 60 | 100 | 80 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 30 | 20 |
| சின்ன வெங்காயம் | 130 | 130 | 130 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 50 |
| பாகற்காய் | 70 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 35 | 60 | 60 |
| கரணைக்கிழங்கு | -- | 100 | -- |
| பயற்றங்காய் | 80 | 100 | 110 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 |
| பீற்றூட் | 65 | 80 | 80 |
| கறிமிளகாய் | -- | 80 | 70 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 350 |
| போஞ்சி | -- | 150 | -- |
| கத்தரி தம்புள்ள | -- | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 05 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 |

# பூநகரிப் பிரதேசத்திற்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தி தந்திரோபாயம்



பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D.Durham
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்.

(நேற்றைய தொடர்ச்சி)

பூநகரிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

01. 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பூநகரிப் பகுதியிலிருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்ததாலும் யுத்தத்தின் விளைவாக இவர்களது வாழ்விடங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. வீடுகள் பெருஞ்சேதத்திற்குட்பட்டு கூரைகள் இல்லாது காட்சி தருகின்றன. இப்பிரதேசத்தில் வீடுகளைப் புனரமைப்பதற்கும் புது வீட்டுத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு மிகக்கூடிய முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். வீட்டுத்திட்டங்கள் இன்றைய தேவைகளுக்கு ஏற்றதாக அமைய வேண்டும். மக்களின் பங்களிப்புடன் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தில் மறவன்புலோ, மணற்காடு, அல்லைப்பிட்டி, புனிதநகர் வீட்டுத்திட்டங்களை முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்ப காலங்களில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் பல தோல்வியில் முடிந்துள்ளன. இதற்குப் பல காரணங்கள் உண்டு. வீடுகள் மிகச் சிறிதாக அமைந்தது, பொருத்தமில்லாத பள்ளக் காணிகளில் அமைக்கப்பட்டது, குறைந்த எண்ணிக்கையில் வீடுகள் தனிமையான இடங்களில் அமைக்கப்பட்டது. தரமற்ற கட்டுமானங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதற்குச் சில உதாரணங்கள்:- யாழ்ப்பாணக் கரையோரக்குடியிருப்புக்கள், வசந்தபுரம்- சூரியவெளி, கல்லுண்டாய்-திருவாடுதுறைக் குடியிருப்பு போன்றன.

பூநகரி ஒரு கிராமிய விவசாயப் பிரதேசமானதால் இதனை மனதில் நிறுத்தி வீடமைப்புத்திட்டங்கள் அமைய வேண்டும்.

02.இப்பிரதேசம் நிலவளம் மிக்கதாக இருக்கின்றது. சராசரி குடிசன அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 50 இற்கு குறைவாகவுள்ளது. மேலும் மொத்த நிலப்பரப்பில் 75 சதவீதம் வரை காடாக, மேய்ச்சல் நிலமாக பயன்படுத்தப்படாத நிலமாக இருப்பதால் நிலம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள், விவசாயக் குடியிருப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக பல்லவராயன் கட்டு, முழங்காவில் பகுதியில் நில அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

03. பூநகரிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நீர்ப் பற்றாக்குறைவு பெரும் பிரச்சினையாக தொடர்ந்து இருந்து வருகின்றது. விவசாயத்திற்கு மாத்திரமல்லாமல் குடிநீருக்கும் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். இதனால் இப்பிரதேசத்து நீர் ஆதாரங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். மண்டக்கல்லாறு, பல்லவராயன் கட்டு ஆறு மற்றும் பருவகால சிற்றருவிகளில் பாயும் நீர் தேக்கப்பட்டு விவசாயம் மற்றும் தேவைகளுக்கு பயன்படுத்த முடியும். இப்பகுதியிலுள்ள கரியாலை நாகபடுவான் குளமும் அதன் நீர்ப்பாசன வாய்க்கால்கள் மேம்படுத்தப்படும் பொழுது 600 ஹெக்டர் நிலம் நீர்ப்பாசன உறுதி செய்யப்படுவதுடன் மேலும் புதிய நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறும். மேலும் இப்பகுதியிலிருக்கும் 90 சிறு குளங்கள் சீர்படுத்தப்படுமாயின் நீர்ப்பாசனம் பெறும் பரப்பளவை பெருக்க முடியும். இதே போல் கைவிடப்பட்ட 27 குளங்கள் திருத்தப் படுமாயின் நீர் வளத்தையும் நீர்ப்பாசனம் பெறும் பரப்பையும் அதிகரிக்க முடியும்.

முழங்காவில் மற்றும் பூநகரிப் பகுதிகளில் தரைகீழ் நீரைப் பயன்படுத்தி ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாய நடவடிக்கைகளை பெரிய அளவில் விரிவாக்கம் செய்யலாம்.

04.இரணமடுக்குள நீரை ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாணக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. இத்திட்டத்தின் ஒரு பகுதி பூநகரிப் பகுதி குடியிருப்புகளுக்கு குடிநீர் கிடைக்க வழி செய்வதாகும். இதனால் இத்திட்டத்தின் மூலம் பூநகரி குடியிருப்புக்கள் குடிநீரைப் பெற உத்தரவாதம் பெறப்பட வேண்டும்.

05. பூநகரி பிரதேசம் தென்னைச் செய்கைக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது. இங்கு 4165 ஏக்கரில் தென்னை செய்யப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இதில் 3715 ஏக்கர் முழுமையாகத் தென்னையும் 450 ஏக்கர்களில் ஏனைய பயிர்களுடன் தென்னைச் செய்கையும் இடம்பெற்றது. யுத்தத்தினால் நீண்ட காலமாக பராமரிப்பில்லாமல் தென்னந் தோட்டங்களில் கிடைக்கும் வருமானம் மிகக்குறைந்துள்ளது. இதனால் இத்தோட்டங்களில் வருமானத்தைப் பெருக்க தென்னை மீள் நடுகையும் மற்றும் விளைச்சலை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

06. பூநகரி-கல்முனை குடாப் பகுதியில் குறிப்பாக மண்ணித்தலைப் பகுதியில் காணப்படும் மணலுக்கு இன்று பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் / வன்னிப் பகுதியில் பெருமளவு கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதால் இங்குள்ள மணல் வளம் பயன்படுத்தப்பட இருக்கிறது. இந்நிலையில் இப்பிரதேசத்தின் சுற்றுச் சூழல் பாதிக்கப்படாமலும் இப்பிரதேச மண்வளத்தால் இப்பகுதி மக்களுக்கு பொருளாதார நன்மைகளும் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பூநகரி மணற் பிரதேசம் பாழ்நிலமாக மாறாமலும் மக்கள் நன்மையடைக் கூடிய வகையிலும் மண் அகழ்வு இடம்பெற வேண்டும்.

07. பூநகரிப் பகுதியில் இன்றும் இயற்கைக் காடுகள் குறிப்பாக சுன்னாவில், மண்டைக் கல்லாறு ,நாகபடுவான் பகுதிகளில் காணப்படுகின்றன. மேலும் புதிதாக விருத்தி செய்யப்பட்ட தேங்கங்காடுகளும் பல இடங்களில் உள்ளன. இயற்கை, செயற்கை காட்டு வளத்தை இப்பகுதி மக்களுக்கு பயன்படும் முறையில் சிறப்புற பேணி பயன்படுத்த வேண்டும்.

08. பல்லவராயன்கட்டு, கிராஞ்சி பகுதிகள் மரமுந்திரி செய்கைக்கு தகுந்த நிலவளத்தை கொண்டிருப்பதால் உள்ளூர் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் மரமுந்திரிகை செய்கையை முன்னெடுக்க வேண்டும். ஏற்கனவே மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் மரமுந்திரிகைத் தோட்டங்களை இங்கு விருத்தி செய்துள்ளது கவனிக்கத்தக்கது.


09. பூநகரியில் 21 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றுள் 2 பாடசாலைகள் 1A-B மற்றும் 2 பாடசாலைகள் 1C தரத்தையும் உடையன. இப்பிரதேசத்தில் கல்வி விருத்திக்கு பூநகரி, முழங்காவில், வேரவில், நல்லூர் மகா வித்தியாலயங்கள் சிறப்பான இரண்டாம் நிலைக் கல்வியை அளிக்கக் கூடிய நிலைக்கு சிறப்புற விருத்தி செய்யப்பட வேண்டும். ஏனைய 17 ஆரம்ப சிறிய பாடசாலைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கின்றன. இப்பாடசாலைகளின் சிறந்த செயற்பாட்டின் மூலமே கிராமிய பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை முன்னெடுக்க முடியும். இப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட்டு பௌதீக வளங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகள் சிறப்பாக இயங்க ஆசிரிய விடுதிகள் அமைக்கப்படுவது மிகவும் முக்கியமானது.

பூநகரியின் மாவட்ட வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட வேண்டும். இதன் மூலமே இப்பிரதேசத்தில் வைத்திய சுகாதார சேவைகளை இலகுவாக பூர்த்தி செய்ய முடியும். கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஆகியன இப்பிரதேச மக்களின் மேல் மட்ட வைத்திய சேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்யலாம்.

10. நாவற்குழி- பூநகரி- மன்னார் வீதி, (ஏ 32) , பூநகரி- கல்முனை வீதி, பூநகரி- பரந்தன் வீதி, பல்லவராயன் கட்டு- அக்கராயன்- முறிகண்டி வீதி, பல்லவராயன் கட்டு- வேரவில்- வலைப்பாடு- பாலாவி- பூநகரி கரையோரப்பாதை ஆகியன நெடுஞ்சாலைகளாக விருத்தி செய்யப்பட வேண்டும். இக் கரையோர வீதி அமைப்பின் மூலம் கிராஞ்சி, பொன்னாவெளி பிரதேசங்கள் அபிவிருத்தி அடைய நிறைய வாய்ப்புண்டு. பூநகரி பிரிவில் கிராம வீதிகளின் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமானது. இக்கிராம வீதிகளை விருத்தி செய்வதன் மூலமே தாழ்வுற்ற நிலையில் இருக்கும் கிராமங்களை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லலாம்.

11. ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு சிறிய, பெரிய நகரங்களின் செயற்பாடு முக்கியமானவையாகும். இந்நகரங்கள் பின்னணிப் பிரதேசங்களுக்கு சேவை வசதிகளை வழங்கவும் விவசாயம் மற்றும் சேவை சார் சிறு கைத்தொழில்கள் விருத்தியாகுவதற்கும் காலத்துக்கு காலம் புதுமைகளை பரப்பவும் உந்துசக்தியாக அமையும். இன்று பூநகரிப் பகுதியில் சிறு நகரங்கள் இன்மை இப்பகுதியின் அபிவிருத்திக்கு மிகவும் குந்தகமாகவுள்ளது. இதனால் பூநகரி- வாடியடியையும் முழங்காவிலையும் சிறு நகரங்களாக விருத்தியாக்க வேண்டும். இதன்மூலம் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை துரிதப்படுத்த முடியும்.

12. வாடியடியிலும் முழங்காவிலிலும் சகல வசதிகள் கொண்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். இன்று இப்பகுதி மக்கள் எரிபொருளுக்காக கரடிப் போக்குக்கு போக வேண்டியுள்ளது. இவ்விடங்களில் எரிபொருள் நிலையங்கள் அமையும் இடத்து விவசாயிகள், மீன் பிடியாளர்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் பெரும் நன்மையடைவர்.




13. வாடியடியிலும் முழங்காவிலிலும் நீடித்த கருமபீடமாக இன்று இயங்கும் இலங்கை வங்கி செயற்பாடுகள் முழு நிறைவான வங்கிச் செயற்பாடாக மாற்றப்பட வேண்டும். மேலும் மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிற வங்கிகளின் கிளைகள் இவ்விரு இடங்களிலும் அமைய வேண்டும். இதுபோல காப்புறுதி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் செயற்பாடு ஏற்படின் வளர்ச்சிக்கு இலகுவாக அமையும்.

14. பூநகரிப் பிரதேசத்தின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்ய இங்கு ஒரு இ.போ. ச பஸ் டிப்போ அமைக்கப்பட வேண்டும். இதேபோல் மணியந்தோட்டம் மண்ணித்தலை படகு சேவை தொடர்ந்து இடம்பெற வேண்டும். இதன் மூலம் கல்முனை, கௌதாரி முனை மக்கள் மாத்திரமல்லாமல் யாழ்ப்பாண பகுதி மக்களும் நன்மை பெறுவர்.

15. இப்பிரதேசம் நீண்டகாலமாக மின்சார வசதியற்றதாக இருந்து வந்துள்ளது. அண்மையில் பூநகரியில் சில பகுதிகளுக்கு மின்சாரம் கிடைத்துள்ளது. இப்பிரதேசமக்களின் பொருளாதார மற்றும் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்த சகல குடியிருப்புக்களுக்கும் மின் வசதி கிடைக்க வழி சமைக்க வேண்டும்.

16. இன்றைய பூநகரி உதவி அரசாங்கப் பிரிவு மிகப் பெரிதாக இருப்பதனால் இப்பிரிவை பூநகரி, முழங்காவில் என இரண்டு பிரிவுகளாக பிரிக்க வேண்டும். இவ்வாறு பிரிக்கப்படும் இடத்து முழங்காவில், பல்லவராயன் கட்டு, கிராஞ்சிப் பகுதிகள் அதாவது தெற்கு பூநகரிப் பிரிவு துரிதமாக விருத்தி பெற வாய்ப்புண்டு. பூநகரிப் பிரிவுக்குள் நல்லூர், ஆலங்கேணி, கொள்ளக் குறிச்சி, செட்டியார் குறிச்சி, ஞானி மடம் மட்டுவில் நாடு மேற்கு, மட்டுவில் நாடு கிழக்கு, பரமன்கிராய், கௌதாரிமுனை ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

முழங்காவில் பிரிவுக்குள் ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு, கரியாலை நாகபடுவான், பல்லவராயன் கட்டு, முழங்காவில், நாச்சிக்குடா, கிராஞ்சி, பொன்னாவெளி, இரணை மாதா நகர் ஆகியன உள்ளடக்கப்பட வேண்டும்.

17. பூநகரி பிரதேச சபைகளின் செயற்பாடுகள் மக்களின் இன்றைய தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய முறையில் ஆற்றல் மேம்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் மக்களின் வாழ்க்கையை இலகுபடுத்தக் கூடிய சந்தை வசதிகள், கிராம வீதிகள், சனசமூக நிலையங்கள்,மயானங்கள் ஆகியன சிறப்புற இயங்கவும் மேம்படுத்தவும் வழிவகை செய்யலாம்.

18. யுத்தத்தினாலும் பிற காரணங்களாலும் குடும்பத் தலைவர்களை இழந்து குடும்பப் பொறுப்பை தலைமை தாங்கும் பெண்களுக்கு விசேட வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். மேலும் இவர்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார உளவியல் பிரச்சினைகளுக்கு சிறந்த முறையில் முகம் கொடுக்கக் கூடிய முறையில் வலுவூட்டல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

19. யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மாற்றுத் திறன் உடைய பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும் மேலும் சமூக பொருளாதார முன்னேற்றங்களுக்கும் பொருத்தமான மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களை மக்களை அணி திரட்டி மக்கள் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படின் குறுகிய காலத்திற்குள் வினைதிறனான, விளைதிறனான பயன்களைப் பெற முடியும். சிறிய திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு கீழிலிருந்து மேல் நோக்கிய செயற்பாடுகளாக அமைய வேண்டும். தற்போது அரசாலும் சர்வதேச நிதி நிறுவனங்களாலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் குறிப்பாக புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவர்கள் வழங்கும் உதவிகள் சரியான முறையிலும் விரயமற்று பயன்படுத்தப்படுமாயின் நிலைத்து நிற்கக்கூடிய மேம்பாட்டு செயற்பாடுகளை அடைய முடியும். அபிவிருத்தியைத் துரிதப்படுத்த ஆற்றல்மிக்க பணிப்படை முக்கியமானது. ஊழியர் பற்றாக்குறைவும் அலுவலக வசதி குறைவுகளும் பணியாளர்களின் செயற்பாட்டை குறைக்கின்றது. இப் பிரிவில் 19 கிராம சேவையாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 11பேரே கடமையாற்றுகின்றனர். சிலர் இரண்டு பிரிவுகளை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளனர். அடிமட்ட நிர்வாகத்தில் இந்நிலை இருப்பது புனர்வாழ்வு புனருத்தாரண அபிவிருத்தி செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு பெரும் குறைபாடாகவுள்ளது. இதனால் பின்தங்கிய பகுதிகளில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு நிறைவான ஆற்றல்மிகு ஆளணி தேவையானதுடன் இவர்கள் அப்பகுதியிலேயே குடும்பத்துடன் இருந்து செயலாற்றக்கூடிய வாய்ப்புக்களும் வசதிகளும் குறிப்பாக வீட்டு வசதி, பிள்ளைகளுக்கான கல்வி வசதி இருக்க வேண்டும்.

ஒரு பக்கத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளும் மறுபக்கத்தில் சமூக கலாசார மேம்பாட்டுக்கான செயற்பாடுகள் இடம்பெற்றால்தான் முழுமையான வளர்ச்சியை காண முடியும். தூர நோக்குடனும் சிறந்த பணியுடனும் குறித்த இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான தந்திரோபாயங் களை தளநிலைக்கு ஏற்ப கடைப்பிடிக்க வேண்டும். அரசு, மக்கள், சிவில் சமூகம் இணைந்து செயற்பட்டால் இன்றைய துன்ப நிலையிலிருந்து குறுகிய காலத்திற்குள் விடுபடலாம். இம்முயற்சிகள் மூலம் பூநகரி பிரதேசம் வாழ்வதற்கு சிறந்த வசதிகளும் வாய்ப்புக்களும் கொண்டும் மேலான சமுதாய கட்டமைப்பு கொண்ட பகுதியாக மாறும். இதுவே தருணம் இணைந்து செயற்பட்டு வளர்ச்சி பெற. (முற்றும்)

# இராணுவத்துக்கு ஓய்வூதியம் வழங்கும் நடைமுறைக்கு ஐ.தே.கூ. எதிர்ப்பு

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு ஓய்வூதியம் வழங்கும் நடைமுறைகள் குறித்து ஜன நாயக தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பை வெளி யிட்டுள்ளது.

கடமையில் ஈடுபட்ட பிரதேசங்களின் அடிப்படையில் ஓய்வூதியத்தை நிர்ணயிப்பது முறையாகாது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை யினால் இராணுவ அதிகாரிகளும் உத்தி யோகத்தர்களும் பாதிப்படையக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர் அதிகாரிகளின் கட்டளைக்கு அமை யவே இராணுவ உத்தியோகத்தர்களும் அதி காரிகளும் பிரதேசங்களில் கடமையில் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியம் வழங்குவது பொருத்தமாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை யுத்த வலயத்தில் கடமை யாற்றிய படைவீரர்கள் பூரண ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளத் தகுதியுடைவர்கள் என பொதுநிர்வாக அமைச்சர் ஜோன் சென விரட்ன தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வனவிலங்கு பூங்காக்கள் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)


சுற்றுலாப் பயணிகளின் நலன்கருதி சர ணாலயங்கள் சிலவற்றை வனவிலங்கு பூங் காக்களாக மாற்றுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றை விரைவில் சுற்றுலாப் பயணி களின்தேவைக்கேற்ப அமைத்து கொடுக்கவுள் ளதாக வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்ரவங்ஷ பதிராஜ தெரிவித்துள்ளார்.

மடு, சுண்டிக்குளம், சோமாவதி ,ரன்தெனி கல உள்ளிட்ட சரணாலயங்களை சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக திறந்து வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த வனவிலங்கு பூங்காக்களை சுற்றுலாப்பயணிகள் பார்வையிடுவதற்கு இது வரை அனுமதி வழங்கப்படவில்லை எனவும் இந்த வனவிலங்கு பூங்காக்களை பகுதி பகு தியாக மக்கள் பார்வைக்காக திறந்து வைக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஜீவராசிகள் திணைக் கள பணிப்பாளர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



**ஆறாம் திருவிழா (12.06.2011)**

**வள்ளியின் வடிவேலா!**
**வா வசந்தத்தை தா**

ஆனைமுகனின் தம்பியே ஆறுதலை தந்திடப்பா
கொற்றவையின் கோலமயிலோனே கோடிவரம் தந்திடப்பா

சூரனின் மார்பதை பந்தாடினாய்
குறவள்ளியின் மணவாளனாய் மாலை சூடினாய்
தெய்வயானையவளையும் ஏற்றிட்டாய் – உனை
தேனமுது மணம் கமழ ஔவை பாடினாள்

சுட்டபழம் போட்ட வல்லவனே
நெற்றிக் கண்ணவனிடமிருந்து உதித்தவனே
தனித்திருந்த காலத்தின் நியதிகளால்
தரணியில் எனக்கோர் இடமில்லை


கலைகளை அருளும் கார்த்திகேயனே! கனத்த இதயம் அழுகிறது
வேதனை வரும் போதெல்லாம் நான் வேதனையில் வாடிப் போகாமல்
வெற்றிகள் பெற்று தந்திடப்பா

மருதங்கேணியூரான், பொற்பதி

(5114)

**6 ஆம் திருவிழா உபயகாரர்**

## அகமகிழ்ந்து நன்றி கூறுகின்றோம்



வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹாகணபதிப் பிள்ளையார் கோவிலில் கடந்த 27.05.2011 அன்று நடைபெற்ற சிவாச்சார்யாபிஷேக விழா மற்றும் ஸ்தானீக குரு கௌரவிப்பு விழாவி லும் கலந்து சிறப்பித்த அன்பு உள்ளங்களுக்கு நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின் றோம். அவ்வகையில் எமது தீட்சா குருவுக்கும், வருகை தந்திருந்த அந்தண சிரேஷ்டர்க ளுக்கும், இவ்விழாவில் எமது தந்தையார் 45 ஆண்டுகள் இறைபணி ஆற்றியமையை விதந்து கௌரவித்து, இவ்விழாவுக்கு உறுதுணை நின்ற எமது அன்புக்குரிய ஆலய அறங்கா வலர் திரு.சி.கனகசபாபதி அவர்கட்கும், இவ்விழாவுக்கு தலைமை தாங்கி நடாத்தி வைத்த திரு. கு.குகதாசன் அவர்கட்கும், கௌரவ விருந்தினராக வருகை தந்த யாழ். அரச அதிபர் திரு.திருமதி இமெல்டா சுகுமார் தம்பதியருக்கும், பத்திரிகை வாயிலாக வாழ்த்திய வட்டு காளிகோவில் பரி பாலன சபையினர், வட்டு கண்ணகியம்மன் கோவில் நிர்வாக சபையினருக்கும், தொண்டர் சபையினருக்கும், அன்றைய தினம் வாழ்த்துக் கட்டுரைகளை சிரமம் பாராது பிரசுரித்த தினக் குரல், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரிய பீடத்தினருக்கும் வாழ்த்து மடல்கள், வாழ்த் துரைகளை வழங்கி, பொன்னாடைகள், மலர் மாலைகள் அணிவித்தவர்களுக்கும், எமது சிறிய அழைப்பை ஏற்று வருகை தந்து பலவழிகளிலும் உதவி புரிந்த அன்புக்கினிய அனை வருக்கும் அகமகிழ்ந்து நன்றி கூறுகின்றோம்.

**சிவஸ்ரீ S.நடராஜசர்மா**
**சிவஸ்ரீ N.பிரசாந்தக்குருக்கள்**
**ஸ்ரீமதி லாவண்யா தம்பதிகள்**
**ஸ்ரீமதி வெங்கடேஸ்வர சர்மா**
**குடும்பத்தினர்.**

(5161)

# இராணுவ தலைமையக காணி விற்பனை அரசாங்க கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

காலி முகத்திடலில் அமைந்துள்ள இரா ணுவத் தலைமையகத்திற்கு சொந்தமான காணி விற்பனை பற்றிய தரவுகள் அரசாங்கக் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

சீன நிறுவனமொன்றான சங்கிரிலா நிறுவனத்திற்கு இந்தக் காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அரசாங்கக் கணக்குக ளில் இந்தத்தரவுகள் உள்ளடக்கப்படாமை அரசியல் சாசனத்திற்கு முரணானது என ஐக் கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

10 முதல் 20 ஏக்கர் வரையிலான காணி கள் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அரசியல் சாசனத்தின் 148ஆம் சரத்தின் அடிப்படையில் அரசாங்கக் காணி விற் பனை பற்றி அறிவிக்கப்படவேண்டும் என்ற போதிலும் தற்போதைய அரசாங் கம் இந்தத் தகவல்களை மறைப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதிகாரம் படைத்த அரசாங்க அதிகாரி கள் எவருக்கும் அறிவிக்காமலேயே அர சாங்கக் காணிகளை விற்பனை செய்யக் கூடிய நிலைமை காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மன்னாரில் 11 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சந்தேக நபர் கைது

(கொழும்பு)

தலைமன்னார் பிரதானவீதி சின்னக்கரு சல் கிராமத்தில் 11 வயதுடைய சிறுமியொரு வரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத் தியதாக கூறப்படும் சந்தேக நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் துஷ்பிரயோகத்துக்கு உட் படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார் என்று மன்னார் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

மேற்படி சிறுமி கடந்த வியாழக்கிழமை பாடசாலை முடிவடைந்த நிலையில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது குறித்த நபரினால் பலவந்தமாக இழுத்துச் செல்லப் பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத் தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த தையடுத்து சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் உரிய பொலிஸ் விசார ணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மன்னார் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)


புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...



**சரவணா ரெக்ஸ்**



770, 772, கே.கே.எஸ். வீதி
(தட்டா தெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 0421 Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம், 021 222 1723

Email: nallur.saravana@gmail.com

## நாட்டில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும்

### கல்வியமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு தற்போது வாய்ப்பு ஏற்பட் டுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரி வித்துள்ளார்.

ஆங்கில ஆசிரியர்கள் 157 பேருக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் அவர்களுக்கான கடிதங்களை வழங்கி வைத்ததுடன் இந்த கருத்தையும் தெரிவித்தார்.

இதனிடையே இந்த நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றிய பிரதி கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, பின்தங்கிய பிரதேசத்திற்கு நியமனங்களை பெற்றவர்கள் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் குறித்த பாடசாலைகளில் பணிபுரிய வேண்டும் என குறிப்பிட்டார்.

பின்தங்கிய பிரதேசத்திற்கு நியமனங்களை பெறுபவர்கள் பின்னர் இடமாற்றி செல்ல முனைவதால் அந்தப் பிரதேச மாணவர்கள் கல்வியில் பின்தங்கிய நிலையிலேயே காணப் படுவதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக் காட்டினார். (ஸ்ரீ-2)

## இவ்வாண்டு இறுதிக்குள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பூர்த்தியாகும்

### புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் போராளிகள் 3 ஆயிரத்து 572 பேர் மட்டுமே இன்னமும் எஞ்சியிருப் பதாகவும் இந்த ஆண்டின் இறுதிக்குள் தமி ழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போரா ளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் பூர்த்தியாகும் என புனர்வாழ்வு ஆணை யாளர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

3 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட முன் னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக் கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத த்தில் புனர்வாழ்வு அளிக்கும் நோக்கில் 11 ஆயிரத்து 664 முன்னாள் போராளிகளை பாதுகாப்பு அமைச்சு ஒப்படைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் 3 ஆயிரத்து 572 முன்னாள் போரா ளிகள் மட்டுமே இன்னமும் எஞ்சியிருப்ப தாகக் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் அமைக்கப்பட்ட 12 முகாம் களில் முன்னாள் போராளிகளுக்கு புனர் வாழ்வு அளிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)



துணுக்காய் கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில் காத்தவராயன் சிந்து நடனக் கூத்து நிகழ்ச்சியில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட மு/மாங்குளம் ம.வி. மாணவர்களையும் கலை ஞர்களையும் நிகழ்வை நெறியாழ்கை செய்த ஆசிரியை செல்வி. ம.மயூரதி ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படம் :- மல்லாவி செய்தியாளர்)*

## பாரிய கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய படைச் சிப்பாய் கைது

பாரியளவு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய படைச்சிப்பாய் ஒருவரை கட் டுநாயக்க பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டரை கோடி ரூபா பெறுமதியான இரத்தினக்கல் கொள்ளை உள்ளிட்ட பல் வேறு குற்றச் செயல்களுடன் குறித்த நபரு க்கு தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

அத்துடன் சந்தேக நபரிடமிருந்து ஆயுத மொன்றும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த நபரிடமிருந்து மூன்று அடையாள அட்டை கள் மீட்கப்பட்டதாகவும் மூன்று அடையாள அட்டைகளிலும் வெவ்வேறு பெயர்கள் குறிப் பிடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகி றது. (ஸ்ரீ-2)

## யுத்தத்தின் போதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சிரேஷ்ட நீதிவான்கள் விசாரணை

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் மூலம் 100 வீதம் துஷ்பிரயோகம் இடம்பெறவில்லை என தம் மால் உறுதிபடக் கூற முடியாது எனவும் நாட் டில் அவசரகாலச் சட்டம் துஷ்பிரயோகம் செய் யப்படவில்லை எனவும் மனித உரிமை ஆணையாளர் நீதிவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார். அவசர காலச் சட்டத்தை கிரமமாக அகற்றுவதற்கு அரசாங்கம் உத்தே சித்துள்ளதாகவும் ஒரே இரவில் சட்டத்தை நீக்கிவிட முடியாது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய சம்ப வம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல் தொடர்பிலான பரிந்துரைகளை அமுல்படுத்தக் கூடிய வகை யில் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தப்பட வேண் டுமெனவும் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறுப்படும் உரிமை மீறல் கள் தொடர்பில் விசாரணை நடத்தி பரிந் துரைகளை சமர்ப்பிக்கும் பொறுப்பு சிரேஷ்ட நீதிவான்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மிஹின் எயார் விமான சேவைக்கு 5.8 பில்லியன் ரூபாய் நட்டம்

(கொழும்பு)

இலங்கையின் அரசாங்க நிதி ஒதுக்கீட் டில் இயங்கி வரும் மிஹின் எயார் விமான சேவை 5.8 பில்லியன் ரூபாய் நட்ட மடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மிஹின் எயார் விமான சேவையின் இந்த நட்டம் இலங்கையின் பொதுமக்கள் வரியின் மூலம் சமப்படுத்தப்படுவதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

மிஹின் எயார் விமான சேவை இலங்கை அரசாங்கத்தின் சொத்து என்று கூறப்படு கின்ற போதும் அது தனியார் நிறுவனமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விமான சேவைக்கு அரச வங்கிகளில் இருந்து கடன்களை பெற் றுக் கொள்வதற்கு இலங்கையின் திறைசே ரியே பொறுப்புக்கூறுநராக செயற்பட்டுள் ளமை தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

## போலி நாணயத்தாள்களை அச்சிட்ட சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

புதிய ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் களை போன்ற போலி நாணயத்தாள்களை அச்சிட்டு வட பகுதியில் விநியோகிப்பதற் காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக் கிளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட பொலிஸ் குழுவினர் கைப்பற்றியுள் ளனர்.

போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் களை அச்சிட்டதாகக் கூறப்படும் பிரதான சந்தேகநபர் இதற்கு முன்னர் ஆயிரம் மற் றும் 500 ரூபா நாணயத்தாள்களை போலி யாக அச்சிட்டு விநியோகித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவர் என்பதும் தெரிய வந்துள்ளது.

போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட ஆறு சந்தேகநபர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் வவுனியா வில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத் தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போலியாக அச்சிடப்பட்ட எட்டரை இலட் சம் ரூபா பெறுமதியான 165 போலி ஐயாயி ரம் ரூபா நாணயத்தாள்களை குற்றப் புல னாய்வுத் திணைக்களம் மீட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய் வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள் விசாரணைப் பிரிவு மேலதிக விசாரணை களை முன்னெடுத்துள்ளது. (ஸ்ரீ-2)


## VACANCIES AT JAFFNA COLLEGE

**Applications are invited for the following posts from qualified and experienced candidates in the respective fields:**

1. A Graduate Teacher in Chemistry with Botany/ Zoology.
2. A Graduate Teacher in Mathematics with Computer studies.
3. A Graduate / Trained Teacher in English.
4. A Graduate Teacher in Economics & Business Studies.
5. A Female Teacher to Primary Section with Physical Education Diploma.
6. Accounts clerk with Computer knowledge and English.

Those who have the necessary qualifications and experiences, can apply on the application forms available at the college office during office hours with copies of certificates. Sort listed applicants will be called for an interview.

Closing date for the application is 30th June, 2011. Please apply to **The Principal, Jaffna College Vaddukoddai.** The envelope containing your application should have the post applied for written on the top left hand corner.

(C-3449)

**Principal.**

# வடக்கில் இராணுவ மயமாக்கம் துரிதகதியில் இடம்பெறுகிறது

3

## சிவராம் நினைவுப் பேருரையில் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ

**சுவிஸில் செயற்பட்டுவரும் சிவராம் ஞாபகார்த்த மன்றம் நடாத்திவரும் "சிவராம் நினைவுப் பேருரை" தொடரில் சட்டத்தரணியும் மனித உரிமை ஆர்வலருமான கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ ஆற்றிய உரையின் தொடர் இங்கு.**


நிமல்கா

### நினைவுச் சின்னங்களும் நினைவுகளும்

வடக்கு மண்ணில் புதிய நினைவுச் சின்னங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. அவை கடந்தகால நினைவுகளை அழிக்க முயல்கின்றன. வடக்கின் ஒவ்வொரு மூலையிலும் புத்தர் சிலை காணப்படுகின்றது. புதிய சிங்கள வெற்றி நினைவுச் சின்னங்கள் ஏ-9 வீதியினை அலங்கரிக்கின்றன.

அதேவேளை, இறந்த தமது குடும்ப உறுப்பினர்களை மே மாதத்தில் நினைவு கூர்வதற்குக் கூட வடக்கு மக்கள் சுதந்திரமற்றவர்களாக உள்ளனர். திலீபனின் நினைவுச் சின்னங்கள் அகற்றப் பட்டுள்ளதுடன் விடுதலைப் புலிகளின் மயானங்களும் நினைவுச் சின்னங்களும் அடியோடு அழிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் எம்மால் நினைவுகளை இல்லாமல் செய்ய முடியுமா? கற்களாலும் செங்கற்களாலும் மக்களின் குரல்களைக் கொன்று விட முடியுமா?

காயங்களைக் கிளற வேண்டாம் என தனது மே 27ஆம் திகதிய உரையில் ஜனாதிபதி எம்மைக் கேட்டிருந்தார். இதற்குப் பதிலாக், கிழக்குத் தீமோரின் உண்மையறியும் ஆணைக்குழுவின் அறிக்கையில் இருந்து ஒரு மேற்கோளை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். "காயங்களுக்கு மருந்திட வேண்டும். நாட்பட்ட காயங்களுக்கு மருந்திடுவதனால் அதனை வெட்டித் திறந்து சுத்தப் படுத்தியே மருந்திட வேண்டும். இல்லாவிடில் காயம் சீழ் பிடித்து மோசமாகி சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நிலைக்குச் சென்றுவிடும்."

துயரம் தொடர்பிலான கூட்டுப் பொறுப்பு பற்றி அவசர வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. கிராமங்களில் குறைந்த வளத்துடன் வாழும்


சிவராம்

சிங்கள இராணுவச் சிப்பாயின் விதவை மனைவி அனுபவிக்கும் வலி, வேதனை எத்தகையது என நானும் நன்கறிவேன். தந்தையில்லாத காரணத்தினால் பிள்ளை பாடசாலையில் நிராகரிப்புக்கு இலக்காகின்றது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் எதிர்காலம் தொடர்பில் நிச்சயமற்ற நிலையில் காணி, சொத்து என்பவற்றுக்கான உரிமைகள் இன்றி வாழ்கிறார்கள். இலங்கையில் அடையாளத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தில் 1990இல் இடம்பெற்ற முஸ்லிம்களின் வலிந்த வெளியேற்றமானது ஒரு துன்பியல் சம்பவமாகும்.

### ஊடகமும் குடிசார்சமூகமும்

தெற்காசியாவைப் பொறுத்தவரை மனித உரிமைகளுக்காகக் குரல் தரும் குடிசார் சமூகத்திற்கும் ஊடகங்களுக்கும் இடையிலான உறவு மிகவும் சிக்கலானது. ஒரு விதத்தில் குடிசார் சமூகத்திற்கும் அரசுக்கும் இடையிலான உறவின் அதீத செல்வாக்கிற்கு அது உட்படுகின்றது சகல உறவுகளிலும் செல்வாக்குச் செலுத்தும் அரசினால் குறைந்த ஜனநாயகச் சூழலில் இது அதிகம் நிகழ்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை ஒரு சில சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய வேளைகளில் ஊடகங்கள் குடிசார் சமூகத்துடன் பொருந்தும் நிலையே உள்ளது.

மனித உரிமைவாதிகளால் வழங்கப்படும் செய்திகளையும் விவாதங்களைப் புரிந்து கொள்வதில் ஊடகங்களுக்கு உள்ளேயும், மிகுந்த வினைத்திறனுடன் தொடர்பாடுவதில் குடிசார் சமூகத்துக்கு உள்ளேயும் தகைமை தொடர்பான கேள்வி எழுகின்றது, அடிப்படையில், மக்கள் அபிப்பிராயம், 'பொது அபிப்பிராய' அரசியல் என்பவை தொடர்பில் பிரபல ஊடகங்களில் விடுக்கும் அழைப்பிற்கும் மனித உரிமை வாதிகளால் முன்மொழியப்படும் விமர்சனப் பாங்கிலான அணுகுமுறைக்கும் இடையே மோதல் உருவாகின்றது. ஒரே பாங்கிலான படங்கள், அரச கொள்கைகளின் நியாயத் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தும் மனித உரிமைவாதிகளைத் தேசவிரோதிகள், துரோகிகள் எனத் தவறாகச் சித்தரித்தல் என்பவை இவற்றுட் சில.

மறுபுறத்தே, ஊடகங்களுக்கு பாரிய 'சமூகக் கடமை' உள்ளது என்ற கருத்தின் அடிப்படையில் ஊடகங்களுடன் ஒரு விசேட உறவைப் பேண விழையும் அநேக குடிசார் சமூகச் செயற்பாட்டாளர்களினது செயற்பாடு கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டியது.

ஊடகங்களுடனான தமது உறவு சலுகையுடன் கூடியதாக அன்றி தொழில் தர்மத்தின் அடிப்படையிலானதாக விளங்கும் வகையில் மனித உரிமைவாதிகள் தமது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். மேலும், மக்கள் நலன் எனும் பரந்த கருத்தின் அடிப்படையில் அரசினால் உருவகப்படுத்தப்படும் விவாதத்தின் அடிப்படையில் ஊடகங்களின் 'சமூகக் கடமை' என்பது பல்வேறு வியக்கியானங்களுக்கு உட்படும் நிலையில் சிறந்த ஊடகம், ஊடகச் செயற்பாடு ஆகியவை திறன் வாய்ந்ததாகவும் முக்கியமானவையாகவும் அமைகின்றன.

பலமான சுதந்திரம் மிக்க ஊடகங்களை வளர்த்தெடுப்பதில் இது பிரதானமானது. ஊடகங்களை திறன் மிக்கதாக ஆக்குவதும், தகுதியின்மையை மறைப்பதற்காக தனிப்பட்ட ஊடகவியலாளர்களை 'வளர்த்தெடுப்பதில்' தங்கியிருப்பதும் நீண்டகால அடிப்படையில் சிறந்த தந்திரோபாயமாக இராது. அதேவேளை, குடிசார் சமூகத்துடனான தொடர்ச்சியான விருப்பின்றிய வெளிப்படையான ஈடாட்டமும் பலம்பொருந்திய அரசியல் மற்றும் வர்த்தக நலன்களின் அபாயத்தை எதிர்நோக்கும் பெரும்பாலான ஊடக நிறுவனங்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான அணுகுமுறை என்பதிலும் பார்க்க நிலைபேறான பரந்த விவாதங்கள் ஊடக அமைப்புக்களுடனும் ஊடகவியலாளர் அமைப்புக்களுடனும் நடாத்தப்பட வேண்டும் என அண்மையில் நேபாளத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையே நானும் ஏற்றுக் கொள்கிறேன்.

இலங்கையில் 2008/2009இல் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நடைபெற்ற சம்பவங்களுக்கான வகைகூறல் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை 25 ஏப்ரல் 2011ல் இறுதியாக வெளியிடப்பட்டது.

மோதல் மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மட்டத்தில் நாடு கவனத்தைப் பெறுவது இதுவே முதன் முறையாகும். 2009 மே மாதத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப் பட்டதுடன் முடிவிற்குவந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பு தொடர்பான பிரதான குற்றச்சாட்டுப் பத்திரமாக அறிக்கை விளங்குகிறது.

'நிபுணர் குழு கண்டறிந்த ஆதார பூர்வமான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுமிடத்து சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் என்பவை (இரு தரப்பினராலும்) மீறப்பட்டுள்ளன. அவற்றுள் சில போர்க் குற்றங்கள் மற்றும் மானுடத்திற்கு எதிரான குற்றங்களாக வகைப்படுத்தக் கூடியவை. உண்மையில், யுத்தம் நடாத்தப்பட்ட விதம் சர்வதேசச் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள யுத்தத்தின் போதும் சமாதானத்தின் போதும் தனிமனிதர்களின் கௌரவத்தைப் பாதுகாத்தல் எனும் அம்சத்தை அரசாங்கம் பெருமளவில் மீறியுள்ளது"


இங்கிருந்து நாம் எங்கே செல்வது? யுத்தத்தின் போது நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டோரின் அனுபவங்களே இந்த அறிக்கையின் அடிப்படை.


என்னைப் பொறுத்தவரை இலங்கையின் குடிமக்கள் என்ற அடிப்படையில் ஒரு சாதாரண கேள்வியைக் கேட்பதற்கான வாய்ப்பை அது வழங்குகின்றது. எங்களைச் சுற்றிநடப்பவை யாவற்றையும் கேட்டுக் கொண்டு தொடர்ந்தும் நாம் ஆளப்பட வேண்டுமா?


1989 இல் தெற்கில் எமது மகன்களும் மகள்களும் காணாமற் போனமையை நாம் கண்டோம். முப்பதாண்டுகால மோதலின் பின்னர் வடக்கிலுள்ள குடும்பங்களும் இதே கதைகளையே கூறுகின்றன. கணவன்மார் காணாமற் போகின்றனர். ஜனநாயகத்தின் கோயிலான நாடாளுமன்றத்திற்கு மிக அருகிலேயே அன்றைய துயர நாளில் சிவராமின் உடலத்தை நாம் கண்டெடுத்தோம்.

"தனது சொந்த மக்களுக்கு அடைக்கலம் வழங்கத் தவறும் ஒரு நாட்டை நாடு என அழைக்கவே முடியாது" என ஆங் சன் சுகி கூறியுள்ளார். எத்தனை பேர் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளார்கள்? இடம்பெயர்ந்தோரையும் எதிரிகளையும் நாடு முழுவதிலும் நாட்டுக்கு வெளியிலும் நாம் கொண்டுள்ளோம்.

நிச்சயமாக நாம் எங்கேயோ பிழை விட்டுள்ளோம். எங்கள் முன்னால் உள்ள சவால்களுக்கான விடைகளை கூட்டாகத் தேடும் தருணம் இதுவே. கட்சி அரசியலிலிருந்து விலகி உயர்தர அரசியல், ஜனநாயகம், கௌரவம், நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றை நாம் விருத்தி செய்து கொள்ள வேண்டும். (முற்றும்)







வடமாகாண தமிழ்த்தின நாட்டுக்கூத்து போட்டியின் ஆரம்ப நிகழ்வு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வித் திணைக்கள நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.கிருபாகரன் மங்கல விளக்கேற்றுவதையும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.ராதாகிருஷ்ணன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட நடுவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- என்.குமார்)*

## போர்க்குற்ற விசாரணை நடத்தாது பாரிய துஷ்பிரயோகத்தை மேற்கொள்கிறது அரசு

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடல்

போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தாமையின் மூலம் இலங்கை அரசாங்கம் குற்றங்களை மேற்கொண்டு வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கடந்த 25 வருட யுத்தத்தின் போது இலங்கையின் அரசாங்கப் படையினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணையை நடத்தாமல் இலங்கை அரசாங்கம் பாரிய துஸ்பிரயோத்தை மேற்கொண்டு வருவதாக கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையான சுதந்திர நிலையிலான விசாரணையை இலங்கை அரசாங்கம் தீவிரமான முறையில் அமுல்செய்ய வேண்டும்.

இதனை விடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் மூடிமறைப்பது வருந்தத்தக்க விடயம் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது. (ஶ்ரீ-2)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல முழுநேர, பகுதிநேர, தனியார், மேலைத்தேய மருத்துவ சிகிச்சை நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சகல முழுநேர, பகுதிநேர, தனியார், மேலைத்தேய மருத்துவ சிகிச்சை நிலையங்களின் உரிமையாளர்களும் இக்கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஶ்ரீ)

## போலிக்கடவுச்சீட்டை பயன்படுத்தி பிரித்தானிய விசாவுக்கு விண்ணப்பித்த இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

போலியான ஆளடையாளத்தைக் கொண்ட கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பிரித்தானியாவுக்கான விசாவுக்கு விண்ணப்பித்த இலங்கைப் பெண்ணொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் உள்ள தனது கணவனுடன் இணைந்து கொள்வதற்காக இணைந்த விசாவுக்கு அவர் விண்ணப்பித்துள்ளார்.

இந்த விண்ணப்பம் தொடர்பாக பிரித்தானிய எல்லை முகவரகம் ஆராய்ந்த போதே வேறுபட்ட ஆளடையாளத்தைக் கொண்ட கடவுச்சீட்டை பயன்படுத்தியிருந்தமை தெரியவந்துள்ளது. பிரித்தானிய முகவரகம் உடனடியாக இலங்கைப் பொலிஸாருக்கு இது குறித்து அறியப்படுத்தியதன் பிற்பாடே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள குடிவரவு அலுவலகத்தின் நிர்வாகியான கிளெயர் குரே இது குறித்து தெரிவிக்கையில், கடந்த மே மாதம் இதே போன்று போலியான ஆளடையாளத்தைக் கொண்ட இலங்கைக் கடவுச்சீட்டை பயன்படுத்தி கைது செய்யப்பட்ட ஒருவரின் கைதைத் தொடர்ந்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவிற்கு செல்வதற்கான விண்ணப்பங்கள் தொடர்பாக இறுக்கமான முறையில் கண்காணிக்கப்படும். மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்ததால் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு பிரித்தானியாவிற்கு செல்லத்தடை விதிக்கப்படும் என்றார்.

கைது செய்யப்பட்ட குறித்த இலங்கைப் பெண் ஒன்றன்பின் ஒன்றாக 4 மாணவர் விசாக்களில் விண்ணப்பித்துள்ளார்.

இந்த விண்ணப்பங்களை பிரித்தானிய எல்லை முகவரகம் பரிசீலித்த போதே மோசடிச் சம்பவம் தெரியவந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்பட்ட உயர்தர பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞான, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கு கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.**

**இதில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 25 மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு;**

*தரம்-12*

**விஞ்ஞானப்பிரிவு**

ஆர்.கோபிகா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எம்.மிதுரிகா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), என்.மாதங்கி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ்.சுமிதா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ்.பிருந்தா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),வி.லக்சனா (யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), எஸ்.இளங்கீரன் (யா/ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சோபிதா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி.சாஜினி(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), என்.சரண்யா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜே.வேதுஜா(யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி),ஆர்.பவித்திரா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஐ.ஜெனோசா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),வி.பிரசாந்தன் (யா/இந்துக் கல்லூரி), எஸ்.கலினா(யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), எஸ்.சோபிகா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எ.சியாமலி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எம்.திவ்யபாரதி(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எம்.சாந்தமரீன்(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே.பிரசாந்தன் (யா/இந்துக் கல்லூரி),பி.சர்மிளா (யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி),ஜெ.அன்ருவசந்தன்(யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), ரி.பிரதீபா(யா/நெல்லியடி ம.ம.வி), பி.திலுக்சி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஆர். அனுசிதா(யா/வேட்படி மகளர் உயர்தரப் பாடசாலை) எஸ்.மேர்ஜினி (யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), ரி.பிரியந்தி (யா/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

*தரம்-12*

**கணிதப்பிரிவு**

பி.கபிலன் (யா/ஹாட்லிக் கல்லூரி), பி.ஜெனார்த்தசர்மா (யா/இந்துக் கல்லூரி), டி.மிக்கி போல் (யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி), வி.மகில்னன் (யா/இந்துக் கல்லூரி), கே.டசித்ரா கிருஷ்ணா (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி),கே. ஐங்கரன் ( யா/ஹாட்லிக் கல்லூரி), எஸ். கேதிரி (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), எ.விமோசனன் (யா/இந்துக் கல்லூரி), எம். கஜீவன் (யா/இந்துக் கல்லூரி), ஜே. குகபிரசாந்த் (யா/நெல்லியடி ம.ம.வி), வி.நாராயணி (யா/ இந்து மகளிர் கல்லூரி), வை.ஜனுர்ஸ்(யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.அமுதீசன்(யா/ இந்துக் கல்லூரி),எஸ். நிசாந்தன் (யா/ஹாட்லிக் கல்லூரி), எஸ். கிருசாந் (யா/ஹாட்லிக் கல்லூரி),எஸ். கஜந்தன் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), பி.தாஸ்மோகன் (யா/ஹாட்லிக் கல்லூரி), எஸ். சுவேதரன்(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜே.பிரசாந்த் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.விதுர்சன் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), கே.பிரசாந்த் (யா/ஹாட்லிக் கல்லூரி),ஜி.டுசாந்தன் (யா/ஹாட்லிக் கல்லூரி),ரி.துஸ்யங்கா(யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), எஸ்.மயூரன் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), ஜே. கரிகசன் (யா/இந்துக் கல்லூரி), ஜி.அன்ரனி சுஜீவன் (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), எ.ஆன் அனோபிஜா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),

*தரம்-12*

**வர்த்தகப்பிரிவு**

வி.நிரோஜன்(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),எஸ்.சுதன் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), கே.தனுசிஜா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். சிந்து (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),ஆர்.கஜனி (யா/யூனியன் கல்லூரி), எஸ்.இதயச்சந்திரன் (யா/ இந்துக் கல்லூரி),ஜி.மயூரன் (யா/ இந்துக் கல்லூரி),எஸ்.ரமணன் (யா/விக்டோரியக் கல்லூரி), ஆர்.டினேஷ் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), செரோன் சைலிஸ் (யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ். தர்சினி (யூனியன் கல்லூரி), அருள்றேமிந்தா (யா/விக்டோரியாக் கல்லூரி), பி.பிரதீபா (யா/விக்டோரியாக் கல்லூரி), வி.சோபிநாத் (யாழ்ப்பாணக் கல்லூரி),ஈ.உசாந்தினி(யா/கனகரத்தினம் ம.ம.வி), எஸ்.சஞ்சீவன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.சுதர்சன் (யா/உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பா), ஆர்.அபிலாஷினி(யா/உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பா), எஸ்.பரதன் (யா/ஹாட்லிக் கல்லூரி), என். மதுரா (யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), எஸ்.துவாரகா (யா/இந்து மகளிர் கல்லூரி), எம். தயாளினி (யா/கனகரத்தினம் ம.ம.வி), ஜே.ஜினோத் (யா/வேலாயுதம் ம.வி), ஜி.சாஜினி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். சஞ்சிகா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), என்.நிரோஜினி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), எஸ். சுகன்யா (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), ரி.மனோஜன் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி)

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

334...பாதுகாப்புப் படையின் சட்டவிரோதமான நடத்தையினைப் பற்றிய குற்றச்சாட்டுக்களை முன் வைக்கும்போது அமர்வுகளில் அல்லது வெளியே இராணுவ அல்லது உளவுத்துறை அதிகாரிகள் இருப்பது பழிவாங்கும் நடவடிக்கையை அஞ்சும் சாட்சிகளை திகைப்புக்குள்ளாக்குவதாயுள்ளது. சாட்சிகள் சாட்சியமளிக்கும்போது அடிக்கடி அரசாங்க அதிகாரிகள் இருப்பதும் இது போன்றே உள்ளது.

335. "சாட்சியம் அளிக்கையில் எந்தவொரு அச்சுறுத்தல் கட்டாயப்படுத்தல் அல்லது அலைக்கழித்தல் பற்றிய எதுவிதப் புகாரும் கிடைக்கவில்லை" என அரசாங்கத்தின் எழுத்துமூலமான பதில்கள் கூறிய போதிலும் சாட்சியங்கள் சாட்சியமளிப்பதை அதைரியப்படுத்துவதற்கான தெளிவான முயற்சிகள் பற்றி குழு அறிந்தே உள்ளது. ஒரு சம்பவத்தின்போது அத்தகைய அச்சுறுத்தல் பாரதூரமானதென ஆணையாளர்களால் காணப்பட்டு அது பற்றி விசாரிக்குமாறு அவர்கள் காவல்துறையினரைப் பணித்தனர்.

"அச்சுறுத்தல் அல்லது எதிர்கால விளைவுகள்" பற்றி இனங்கண்டுள்ளதாகவும் ஆணைக்குழு மூலங்கள் அறிவித்துள்ளன. சாட்சியமளிக்க வேண்டாமென சாட்சிகளை எச்சரிக்கை செய்தல் மாகாணங்களில் நடைபெறும் அமர்வுகள் பற்றி நேரகாலத்தோடு விபரங்களை



வழங்க வேண்டாமென அதிகாரிகள் மீதான அழுத்தம் மற்றும் அச்சுறுத்தும் விதத்தில் ஆணைக்குழுவினை வீற்றிருந்து அவதானிக்கும் நபர்கள் பற்றியவற்றை உள்ளிட்ட அறிக்கைகள் குழுவுக்குக் கிடைத்துள்ளன.

ஒரேசாட்சி, தான் முன்னர் அளித்த சாட்சியத்துடன் மாறுபட்டவற்றைக் கூறும் நிலைமைகளை உருவாக்கும் விதத்தில் சாட்சிகள் கையாளப்பட்டுள்ளது பற்றியும் குழுவுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன. ஆணைக்குழுவின் முன்னிலையில் தமது சாட்சியத்தைத் திரிபுபடுத்திக் கூறுவதற்கு சாட்சிகள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதற்கான சாத்தியக்கூறுகளை இது குறிக்கின்றது. சாட்சிகள் வழங்கும் அவதானம் மிக்க சாட்சியங்களை குறுகிய மற்றும் நீண்ட காலத்துக்கு பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும் போதிய நடைமுறை நடவடிக்கைகளையும் குழுவினால் காணமுடியாதிருந்தது. ஆணைக்குழுவின் தலைவர் பகிரங்கமாக சாட்சியொருவர் தனியாக எதனையும் சொல்லவிரும்பினால்... (அப்போது) அதுபற்றி "நீங்கள் என்ன கூறினீர்கள் என்பதை ஒருவரும் அறியமாட்டார்கள் என்பதோடு, உங்கள் அடையாளங்களைப் பொறுத்தவரை முழுமையான இரகசியத் தன்மையை நாம் பேணுவோம்" எனக்கூறிய போதிலும் அத்தகைய உறுதிமொழியை காப்பதற்கான நிறுவக அமைப்பையோ எல்.எல்.ஆர்.சி.யின் ஆயுட்காலத்துக்குப்பின் அத்தகைய உறுதிப்பாட்டை காப்பதற்கான செயல்முறை அடிப்படையையோ பற்றிக்குழு அறியவில்லை.

337. இவ்வாறாக, யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது என்ன நேர்ந்தது என்ற உண்மையை கண்டறியும் பாரதூரமான விசாரணைச் செயற்பாடொன்றின்போது எல்.எல்.ஆர்.சி. முன்னிலையில் சாட்சியமளிக்கும் சாட்சிகளுக்கான நியாயமான எதிர்பார்க்கக்கூடிய நிலைமை திருப்திகரமாயில்லை. ஆணைக்குழுவின் முன் எவ்வாறு அவர்கள் தோன்ற வேண்டும் மற்றும் அவர்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பது பற்றி குற்றம் சாட்டப்பட்ட மீறல்களினால் பாதிக்கப்பட்ட சாட்சிகளுக்கு அனேகமாக அறிவிக்கப்படவில்லை. அவர்கள் சாட்சியமளிக்கத் தயார் நிலையில் இல்லை என்பதோடு அவர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் அவர்கள்அலைக்கழிக்கப்படுவதிலிருந்து அவர்கள் போதிய அளவில் பாதுகாக்கப்படவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச தரங்களை நிறைவு செய்யவில்லை.

**உ) ஊடகம் மற்றும் சிவில் சமூகம்: பிரவேசம் மற்றும் அலைக்கழித்தல்**

338. எல்.எல்.ஆர்.சி.யின் நடவடிக்கைகள் பற்றி அறிக்கை விடுப்பதன்மூலம் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதிப்படுத்துவதில் ஊடகங்கள் மிகமுக்கியமானதொரு பாத்திரத்தை வகிக்கின்றன. குறிப்பாக மொரோக்கோ, பெரு, தென்னாபிரிக்காவை உள்ளிட்ட ஏனைய நாடுகளில் சம்பந்தப்பட்ட விடயங்கள் மீதான பொது விவாதத்துக்கான பங்களிப்பை வழங்குவதற்காக இதுபோன்ற ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் பரவலாக தொலைக்காட்சியினூடாக காட்டப்படுகின்றன. அசாதாரண சந்தர்ப்பங்களில் ஊடகங்களைத்தடுக்கலாம் என்றிருந்தபோதிலும் கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பெறவும் அதனைப் பரப்பவும் உள்ள தனியார் சுதந்திரத்தை எல்.எல்.ஆர்.சி. போன்ற அரசாங்க அமைப்புக்கள் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை சர்வதேச மனிதஉரிமைகள் சட்டம் மட்டுப்படுத்துகிறது. அத்தகைய ஏதும் கட்டுப்பாடுகள் அனுமதிக்கப்படக் கூடியவை மற்றும் சர்வதேசசட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தேவையானது மற்றும் அளவுக்குட்பட்டது என்பதை நியாயப்படுத்தும் பொறுப்பு அரசினைச்சாரும்.

பத்திரிகைச் சுதந்திரத்தில் அப்பட்டமாக தலையிடுவதைக் குறிக்கும் விதத்தில் சில ஊடகங்கள் அமர்வுளில் கலந்து கொள்வதை பாதுகாப்பு அமைச்சு தடுத்துள்ளதாக குழுவுக்குக் கிடைத்துள்ள தகவல்கள் அடிப்படையில் தெரியவருகிறது. அமர்வுகளின் போது செய்திகளைச் சேகரிக்கும் உள்நாட்டு ஊடகவியலாள்ளர்கள் அச்சுறுத்தப்பட்டதாக செய்தியறிக்கைகளும் உள்ளன.



**ஊ)பிரவேசம் மற்றும் செயலின் ஒளிவு மறைவற்ற தன்மை**

339. எல்.எல்.ஆர்.சி. அதன் சகல அமர்வுகளையும் ஒளிவு மறைவற்ற தன்மையுடன் நடக்கத்வறியுள்ளதாக நம்பகமான அறிக்கைகள் குழுவுக்குக்கிடைத்துள்ளன. உயர் மட்டத்திலும்கூட இக்குறைபாடு உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் தமது தகவல் சேகரிப்புக்காக அதிகளவில் பொதுமக்கள் ஆதரவில் தங்கியிருப்பதோடு பகிரங்க மற்றும் ஒளிவு மறைவற்ற விதத்தில் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்வது உண்மையைக்கண்டறியும் அணைக்குழுக்களின் நடவடிக்கைகளின் முக்கியமானதொரு அம்சமாகும்.

340. எல்.எல்.ஆர்.சி.யினைப் பொறுத்தவரை இதுவொரு பகுதியாகவே உள்ளது. 2010 யூன் 18ஆம் திகதி ஆணைக்குகுழுவின் அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ள முறைமைகளுக்கு அப்பால் சில சமயங்களில் அதன் முக்கிய செயற்பாடுகள் பற்றிய பகிரங்கத்தகவல் இன்மை, அதன் செயற்பாட்டின் தன்மையாக இருந்துள்ளது. பகிரங்க அமர்வுகளின் எழுத்துப்பிரதிகளை வெளியிடுவது அதன் அமர்வுகள் ஆரம்பித்து ஆறு மாதங்களுக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பகிரங்க அமர்வுகளில் கலந்துகொள்ளும் சாட்சிகளை தெரிவு செய்யும் செயற்பாட்டில் பொதுவான நிச்சயமற்ற தன்மை மற்றும் அதன் அமுலாக்கத்தில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

அமர்வுக்கானதொரு திகதி நிர்ணயிக்கப்படுமுன், "ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றி சாட்சியமளிக்க விரும்புவோர் அனைவரும் முற்கூட்டியே எழுத்துமூலமான அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் என தேவைப்படுத்துவதோடு சாட்சியத்தின் பெறுமதியின் தொடக்க நிலையை அது நிறைவு செய்துள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஆணைக்குழு அதனை ஆராயுமென குழுவுக்கு அரசாங்கம் அனுப்பியுள்ள எழுத்துமூலமான பதில்களில் மாத்திரமே இம்முறைமை மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் தொடக்கநிலைத் தேவைப்படுத்தல்கள் இனங்காணப்படவில்லை என்பதோடு அத்தகைய தொடக்கநிலையை நிறைவு செய்யாத காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட சாட்சிகளின் எண்ணிக்கையோ சாட்சியமளிக்க இருந்தவர்களின் விகிதாசாரமோ பற்றிய தகவல் வழங்கப்படவில்லை. எது எப்படியிருப்பினும் இந்த அணுகுமுறை வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற அமர்வுகளின்போது அனுமதிக்கப்படவில்லை என்பதோடு பல்வேறு சாட்சிக்குழுக்கள் வெவ்வேறு விதமாக நடத்தப்பட்டதை அது குறிக்கிறது.

341. பாதிக்கப்பட்டவர்களின் அமைவிடங்களிலேயே அவர்களின் சாட்சியத்தை பதிவு செய்ய நடைபெற்ற மிகச்சிறிய எண்ணிக்கையிலான அமர்வுகளின்போதுகூட அமைவிடங்கள், நேரங்கள் மற்றும் முறைமை ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளதாகவே இருந்ததோடு அத்தகவலைச் சாட்சியமளிக்கவுள்ளோரும் பொதுமக்களும் பெற்றுக்


## தமிழாக்கம் தொடர் 42

கொள்வது சிரமமாகவே இருந்தது.

குறிப்பாக மாகாணங்களில் நடைபெறும் அமர்வுகள் பற்றி பிரதேச மக்களுக்கு அறிவிக்கத் தவறியமை காரணமாக அமர்வுகள் நடைபெறுவதை அதிகமக்கள் அறிந்திருக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. எல்.எல்.ஆர்.சி.யின் சார்பில் பொதுமக்களுக்கு தகவலை வழங்குவதற்காக மாவட்ட மற்றும் மாகாண அலுவலர்களை பிரயோகித்தது. எல்.எல்.ஆர்.சி.யின் சுயாதீனத்தன்மை பற்றிய தவறான அபிப்பிரயத்தை தோற்றுவிப்பதாகவுள்ளது.

(தொடரும்)

# நாளை இந்திய - இலங்கை கப்பல் போக்குவரத்து ஆரம்பம்




இப்போ-அப்போ-எப்போ? ஆரம்பமாகும் என தொடர்ந்து ஒவ்வொரு காரணம் கூறி தாமதமாகி வந்த இந்தியா-இலங்கைக்கு இடையிலான கப்பல் சேவை நாளை ஆரம்பமாகவுள்ளது.

கொழும்புக்கும் தமிழகத்தின் தூத்துக்குடிக்கும் இடையேயான முதல் பயணிகள் கப்பல் நாளை மாலை தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு புறப்பட்டுச் செல்லும் எனவும் இச்சேவையை இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் ஆரம்பித்து வைப்பார் எனவும் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக்கழகத்தின் தலைவர் சுப்பையா தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு சேவை வழங்குவதில் முன்னணியில் உள்ள பிளமிங்கோ லைனர்ஸ் நிறுவனம் இந்த கப்பல் போக்குவரத்து சேவையை மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக இந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இச் சேவைக்கு ஸ்கோஷியா பிரின்ஸ் என்ற கப்பல் பயன்படுத்தப்படவுள்ளது.

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து கொழும்பு நகருக்குச் செல்ல கடல்மார்க்கமாக 14 மணிநேரம் பயணம் செய்ய வேண்டும். 9 அடுக்கு கொண்ட இந்தக் கப்பலில், 1044 பயணிகளும், 300 தொன் சரக்குகளும் கொண்டு செல்ல முடியும். கப்பலில் மொத்தம் 325 அறைகள் இருக்கும். பயணிகளுக்கு தேவையான உணவு வசதிகளும், பொழுது போக்குகளும் இதில் உண்டு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச் கப்பல் சேவை ஒவ்வொரு திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கும் புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை இக்கப்பல் சேவைக்கு பிரயாண முகவர் நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ள அறுகப்பே ரவல்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எம்.ஜவ்பர் தெரிவிக்கையில்,

கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு செல்வதற்கு 6ஆயிரத்து 500 ரூபாயும், கொழும்பு வருவதற்கு 5 ஆயிரத்து 363 ரூபாயுமாகும் எனவும், பிரயாணிகள் தலா 100 கிலோகிராம் அளவிலான பொருட்களை தம்முடன் எடுத்துச் செல்லலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் இந்தியர்கள் இலங்கைக்கும், 2 இலட்சத்து 39 ஆயிரம் இலங்கையர்கள் இந்தியாவுக்கும் சுற்றுலாப் பயணிகளாக சென்று வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதன்கிழமை நயினாதீவில் இலங்கை வங்கி கிளை திறப்பு

எதிர்வரும் 15-ம் திகதி புதன்கிழமை இலங்கை வங்கி நயினாதீவில் தனது கிளையைத் திறக்கவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளை முகாமையாளர் குலசேகரம் சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க கலந்துகொண்டு வங்கிக் கிளையைத் திறந்து வைக்கவுள்ளார்.

வங்கி ஏற்கெனவே நாடளாவிய ரீதியில் 307 வங்கிக் கிளைகளைக் கொண்டுள்ளது




# இலங்கையில் ரக்ஸியானது நனோ


அமைச்சர் குமார வெல்கம பார்வையிடும் போது..

நனோ கப் பிரைவட் லிமிட்டட் 24 மணி நேர நனோ கப் ரக்ஸி சேவையை ஆரம்பித்துள்ளது. இச் சேவைக்கு முதல் கட்டமாக 25 நனோ கார்கள் பயன்படுத்தப்படும். பின்னர் இவ் எண்ணிக்கை 200 ஆக அதிகரிக்கப்படும் எனவும் விரைவில் இச்சேவை நாடு பூராகவும் விஸ்தரிக்கப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மற்ற முன்னணி நிறுவன ரக்ஸிகளை விட தாங்கள் குறைந்த கட்டணம் வசூலிக்கவுள்ளதாகவும் வாகன செலுத்துநர்களாக பெருமளவு பெண்கள் பணியமர்த்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வாகன நெரிசலை தவிர்க்கும் வகையாலான வீடியோ வழி கண்காணிப்பையும், முழுமையான GPRS கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும். அத்துடன் இக்காரில் பயணம் செய்யும் பயணிகள் தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தனிநபர் விபத்துக் காப்புறுதி வசதியையும் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் உலகின் மிகக்குறைந்த விலைக் கார் என புகழ்பெற்ற நனோ கார்கள் இலங்கையில் ரக்ஸிகளாக ஓடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூ |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 108.73 | 110.33 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 177.28 | 181.31 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 157.00 | 161.22 |
| சுவிஸ் பிராங் | 128.25 | 132.44 |
| கனேடிய டொலர் | 110.84 | 114.17 |
| அவுஸ்திரேலிய டொலர் | 114.56 | 118.28 |
| சிங்கப்பூர் டொலர் | 87.85 | 90.35 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.44 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.79 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# றிச்சர்ட் பீரிஸ் குழும இலாபம் ரூ.3.4 பில்.

# புதிய துறைகளில் வர்த்தகத்தை விஸ்தரிக்க திட்டம்




## கல்வி, சுற்றுலா, பி.பி.ஓ. துறைகளில் கவனம் செலுத்த முடிவு

இலங்கையின் முன்னணி பல்துறை குழும நிறுவனமான றிச்சர்ட் பீரிஸ் குழுமம் 2010/2011ஆம் நிதியாண்டில் ரூ.3.4 பில்லியனை வருமானமாக ஈட்டியுள்ளது. கடந்த 78 ஆண்டுகளாக இலங்கையில் செயற்பட்டுவரும் றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் வருமானம் கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுமிடத்து 1.5 பில்லியன் ரூபாய் அதிகமாகும்.

வரிக்கு பிந்திய இலாபமாக 2.1 பில்லியன் ரூபாய் பதிவாகியுள்ளது. கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இப்பெறுமதி 200 சதவீத வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. இப் பெறுபேறுகள் நிறுவனத்தின் அனைத்து வியாபார நடவடிக்கைகளை மாத்திரம் உள்ளடக்கியதாக அமைந்துள்ளதுடன், இதில் எந்தவிதமான முதலீட்டு இலாபங்களும் உள்ளடக்கப்படவில்லை என றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் தலைவர் சேன யத்தெஹிகே தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் நிதியாண்டு பெறுபேறுகளை விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

குழுமத்தின் மொத்த வருமானத்தில், கேகாலை பிளான்டேஷன்ஸ் , நமுனுகுல பிளான்டேஷன்ஸ் மற்றும் மஸ்கெலிய பிளான்டேஷன்ஸ் போன்ற பெருந்தோட்டத்துறை நிறுவனங்கள் சுமார் 60 சதவீத பங்களிப்பை (ரூ.1.8 பில்லியன்) வழங்கியுள்ளன. சில்லறை விற்பனைத் துறை மூலம் ரூ.828 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது. இது 61 வீத வளர்ச்சியாகும். விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக பெருமளவு நிதி முதலீடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது வடக்கு, கிழக்கு பகுதிகளில் எமது முதலீட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்றார்.

இதேவேளை இது குறித்து றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் பிரதம நிதி அதிகாரி ஜகத் திஸாநாயக் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது குழுமம் நட்டமீட்டும் துறைகளில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்காது பிரதான துறைகளில் மாத்திரம் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

2011 மார்ச் 31-ல் நிறைவடைந்த நிதியாண்டில் குழுமம் மொத்த நிதிப் புரள்வாக 27.2 பில்லியன் ரூபாயைப் பதிவு செய்துள்ளது. கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இது 22% அதிகமாகும். ஆர்பிகோவின் சுப்பர் சென்ரர்களும், சுப்பர் ஸ்ரோர்களும் இலங்கையின் சில்லறை விற்பனைத் துறையில் குறிப்பிடத்தக்களவு புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன.

இலங்கையின் மிகப்பெரும் 3 பெருந்தோட்டக் கம்பனிகளை தம்வசம் கொண்டள்ள றிச்சர்ட் பீரிஸ் குழுமம்,

உயர், நடுத்தர மற்றும் கீழ் நாட்டுத் தேயிலை, இறப்பர், பாம் ஒயில், தெங்கு, கறுவா, ஏலம், றம்புட்டான் மற்றும் இதர செய்கைகளில் ஈடுபடுகின்றது.

இலங்கையின் டயர் விற்பனைச் சந்தையில் முன்னணியில் திகழும் றிச்சர்ட் பீரிஸ் குழுமம், நாடு பூராகவும் 1300 விநியோகஸ்தர் வலையமைப்பையும், வருடாந்தம் சுமார் 6 இலட்சம் டயர்களை மீள் நிரப்பியும் வருகிறது.

இந் நிறுவனம் இந்தியாவின் பிர்லா மற்றும் இந்தோனேசியாவின் கோர்சா டயர்களின் இறக்குமதி விநியோகத்தராகவும் திகழ்கிறது.

றிச்சர்ட் பீரிஸ் குழுமமானது பல்வேறு விதமான பிளாஸ்ரிக் தயாரிப்புக்களை தயாரித்து விநியோகத்து வருகிறது. பிவிசி கதவுகள், சிஎவ்எப் குமிழ்கள் மற்றும் நீர்ப் பம்பிகள் போன்றவற்றின் தயாரிப்பிலும் ஈடுபட்டுவருகிறது. அத்துடன் தளபாடங்களை தயாரித்தல் மற்றும் விநியோகத்திலும் ஈடுபட்டுள்ளது.

அத்துடன் நிறுவனம் சமூகப் பொறுப்புணர்வுதிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. வத்தளையில் அமைக்கப்பட்டுள்ள சுப்பர் சென்ரர் சூரிய சக்தியால் மின்பெறும் வகையிலும், மழை நீர்சேகரிப்பு திட்டத்தின் மூலம் நீர் பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிறுனம், கடந்த ஆண்டு ஆர்பிசி செக்கியூரிட்டிஸ் பிரைவட் லிமிட்டட்டை நிறுவி நிதிச் சேவைகள் துறையில் கால்பதித்திருந்தது. இந் நிறுவனம் முற்றுமுழுதாக பங்குப் பரிவர்த்தனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எமக்கிருக்கின்ற 78 வருட அனுபவத்தில் புதிய தொழில் முயற்சிகளில் அதாவது உல்லாசப் பயணத்துறை, கல்வி மற்றும் பிபிஓ துறைகளில் வர்த்தகத்தை மேற்கொள்வதில் எமது கவனத்தை தற்போது செலுத்துகின்றோம் என்றார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7406.92 | 7231.92 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6857.40 | 6775.88 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் புரள்வு (ரூபா.மில்.) 19,790.88

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* ஹலமசு(5499.00), சிங்கர் இன். (444.90), ஹரிச்சந்திரா(2499.00), புளூ டைமன்ட்ஸ்(6.60), பனசின் பவர்(6.80).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* பான் ஏசியா (28.50), ஹன்ரஸ் (1304.20), மேர்க்.சிப்பிங் (700.00), செலிங்கோ இன்சுரன்ஸ் (700.00), நேஷன் லங்கா(24.60). மேலதிக தகவல்கள்: www.cse.lk

# மட்டக்களப்பில் காணாமற்போன இளைஞன் எலும்புக்கூடாக மீட்பு

(கொழும்பு) —

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தளவாய் மதுரங்காட்டுப் பகுதியில் வெள்ளம் காரணமாக காணாமற் போன நபர் ஒருவர் நேற்று முன் தினம் எலும்புக்கூடாக மீட்கப்பட்டுள் ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட எலும்புக் கூடு ஏறாவூர் தளவாய் பகுதியைச் சேர்ந்த தியாகராசா சந்திரமோகன் (வயது 29) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை இப் பகுதிக்கு விறகு எடுக்கச் சென்றவர் கள் மேற்படி எலும்புக்கூட்டினைக் கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே அவை மீட்கப் பட்டுள்ளன.

குறித்த நபர் கடைசியாக அணிந் திருந்த கறுப்பு நிற ரீ சேட்டினை வைத்தே அவரது சிறிய தாயாரி னால் அடையாளம் காட்டப்பட்டுள் ளது என ஏறாவூர் பொலிஸார் தெரி வித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வெள்ளம் காரணமாக மேற் படி நபர் காணாமற் போன நிலை யில் இது தொடர்பில் அதற்கு மறுதி னம் ஏறாவூர் பொலிஸில் உறவி னர்களினால் முறைப்பாடு செய் யப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி வீ. எம்.ஸியான் நேரில் சென்று மரண விசாரணைகளை மேற் கொண்டார். (ஸ்ரீ-2)

# சுவிஸிலுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு) —

சுவிற்சர்லாந்தில் தங்கியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை கடந்த ஒரு வருட காலத்துக்குள் 978 பேரால் குறைந்துள்ளது.

சுவிஸ் நாட்டு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் இப் புள்ளி விபரத்தை வெளியிட்டுள்ளது.

புள்ளி விபரத்தின் படி கடந்த ஏப்ரல் வரையான ஒரு வருட கால த்துக்குள் சுவிஸில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற வெளிநாட்டவர்க ளின் எண்ணிக்கை 1 ,734,561 இது 4.1 சதவீத அதிகரிப்பு ஆகும்.

சுவிஸில் அதிக எண்ணிக்கை யில் வாழ்கின்றவர்களாக ஐரோப்பி யர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர். ஐரோப்பியர்களின் எண் ணிக்கை 1,114,626 இவர்களுக்கு அடுத்த நிலையில் நோர்வே, ஐஸ் லாந்து, லீக்டன் ஸ்டைன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள் ளார்கள்.

ஆனால், சேர்வியா, பொசுனியா-எர்செகோவினா, குரோவாசியா, துரு க்கி ஆகிய நாடுகளில் இருந்து வந்து சுவிஸில் தங்கி இருப்போர் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டு உள் ளது. இந்த எண்ணிக்கைக்குள் நிர ந்தர வதிவிட உரிமை பெற்று இருப் பவர்களின் தொகையும் உள்ளடங் குகின்றது. குறிப்பாக 978 பேரால் இலங்கையர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. (ஸ்ரீ-2)

# கருத்தரங்கும் செயலமர்வு

(சாவகச்சேரி) —

தென்மராட்சி பிரதேச பாடசா லைகளில் தரம் 12, 13 வகுப்புக்க ளுக்கு இந்து சமயம், இந்து நாக ரிகம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற் றும் வளவாளர்களுக்கான கருத்த ரங்கும் செயலமர்வும் இன்றும் நாளையும் எதிர்வரும் 14 ஆகிய தினங்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக தக வல்களைப் பெற விரும்புவோர் 0117 601601 எனும் தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பினை மேற் கொண்டு மேலதிக தகவல்களை பெறலாம் என மகரகம தேசிய கல்வி நிறுவக தமிழ் மொழித்துறை பணிப்பாளர் ப. விஜயலட்சுமி அறி வித்துள்ளார்.

(ஸ்ரீ-29)



உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்ற அதிபர் கு.தீலிபனை ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.06 12

★ 1429-நூறாண்டுகள் போர்: ஜோன் ஒஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சு இராணுவம் ஆங்கிலேயர்களிடம் இருந்து ஜார்கூ என்ற இடத்தைக் கைப்பற்றினர்.

★ 1775- அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானிய இராணுவத் தளபதி தொமஸ் கேஜ் மசாசுசெட்சில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார். தமது ஆயுதங்களைக் கீழே வைக்கும் அனைத்துக் குடியேற்றக்காரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

★ 1830-34 ஆயிரம் பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியாவை அடைந்ததில் இருந்து பிரெஞ்சுக் குடியேற்றம் அந்நாட்டில் ஆரம்பமாகியது.

★ 1898-பிலிப்பைன்ஸ் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1899-ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 117 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1902-அவுஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.

★ 1934-பல்கேரியாவில் அரசியற் கட்சிகள் தடை செய்யப்பட்டன.

★ 1935-பொலீவியாவுக்கும் பராகுவேயிற்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: 13 ஆயிரம் பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுப் படைகள் பிரான்சில் ஜேர்மனியரிடம் சரணடைந்தனர்.

★ 1943-நாசி ஜேர்மனியர் மேற்கு உக்ரைனில் ஆயிரத்து 180 யூதர்களைப் படுகொலை செய்தனர்.

★ 1964-தென்னாபிரிக்க நீதிமன்றம் நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை விதித்தது.

★ 1967- சோவியத் ஒன்றியம் வெனேரா 4 விண்கலத்தை வெள்ளிக் கோளை நோக்கி ஏவியது. வேறொரு கோளின் வளிமண்டலத்துள் சென்று தகவல்களைப் பூமிக்கு அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1987-மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன்-பெடெல் பொக்காசாவுக்கு அவரது 13 ஆண்டுகால ஆட்சியில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக மரணதண்டனை அறிவிக்கப்பட்டது.

★ 1990-ரஷ்யக் கூட்டமைப்பின் நாடாளுமன்றம் சோவியத் ஒன்றியத்தில் இருந்து ரஷ்யாவின் விடுதலையை முறைப்படி அறிவித்தது.

★ 1991-போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதியானார்.

★ 1991-மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் 65 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1999-நேட்டோ தலைமையிலான ஐ.நா. அமைதிப் படை கொசோவோவினுள் நுழைந்தது.

★ 2005-அருளானந்தம் சுரேஸ் ஜோக்கிம் டென் பின் பௌலிங் (ten bin bowling) என்ற விளையாட்டினை ரொரண்டோவின் உலக சாதனைக்காக 100 மணித்தியாலங்கள் தொடர்ந்து விளையாடி தனது முப்பதாவது கின்னஸ் உலக சாதனையினை நிலைநாட்டினார்.

★ 2006-கூகுள் எர்த் லினக்ஸ் பதிப்பு வெளியிடப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1924-ஜோர்ஜ் டபிள்யூ புஷ், அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதி

★ 1932-பத்மினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை(இ.2006)

★ 1942-பேர்ற் சக்மன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய உடற்றொழிலியலாளர்

★ 1957-ஜாவெட் மியன்டாட், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாளர்

### சிறப்பு நாட்கள்

★ பிலிப்பைன்ஸ் சுதந்திர தினம்

★ உலகக் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம்

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### காற்றுவிடு தூது...

தென்றலாய் புயலாய்
தேசமெங்கும் சுற்றும் காற்றே
விண்ணுக்கும் மண்ணுக்கும்
வேற்றுக் கிரகத்துக்கும்
சென்றுவரும் உன்னிடத்தில்
சிறியதோர் வேண்டுகோள்
என் மகன்கனை
எங்கே என்று தெரியவில்லை?
காணாமல் போனதற்கும்
கண்டவர்கள் யாருமில்லை!
சிறையில் உள்ளானா?
சிறுதகவல் கூடஇல்லை
உயிருடன் உள்ளானா?
உண்மை ஏதும் தெரியவில்லை
எப்போது அவன் வருவான்?
எம்மோடு சேர்ந்திருப்பான்?
அன்னை அழுகிறாள்
அந் நாள் எண்ணி எண்ணி
உயிருடன் துடிக்கிறோம்
உன் தயவை நாடுகின்றோம்
உன்னால் முடியுமிது
உதவிடுவாய் எங்களுக்கு

சி.சபா
வடவரணி

### முகவரி தேடி

அகதி அந்தஸ்து
கையேந்தியே கழிகின்ற
பொழுதுகள்...
கண்ணீர் சுமந்த
வாழ்க்கை-குருதிக்
கறைபடிந்த பூமியில்
சுதந்திரமற்ற
பயணங்கள்
இதுதான் இன்றைய
தமிழரின் முகவரி

கி.சரண்யா, தாவடி

### இயந்திரவாழ்க்கை

நாளும் வந்து
குவியும் செய்திகளில்
நிர்வாணமாய்
எம் எதிர்காலம்
எல்லாமே சிதைந்தழிய
பண்பாடு ஒழுக்கம்
விடைபெற
மிஞ்சப் போவது
இயந்திரங்களில்
மனிதம் தொலைந்துபோன
மனிதர் மட்டுந்தான்

புலோலியூர்
வேல்நந்தன்

### அவரவர் பார்வையில்

**பாசம்**
விற்க முடியாது
விற்றாலும் எவராலும்
வாங்க முடியாது
**தலையணை**
இரவுகளின் நண்பன்
**தீக்குச்சி**
இறப்புக்கே பிறப்பெடுத்த
குழந்தை
**கனவு**
கட்டணமில்லாத
இலவச காட்சி
**ஞாபக மறதி**
மறந்துவிட்ட மறதியை
ஞாபகப்படுத்துகின்றன
கடந்த கால நினைவுகள்

வி.சிவதாஸ்
சுதுமலை

**கல்வி**
காலத்தால் அழியாத
அறிவுக் கலசம்
**வாழ்க்கை**
இன்பம் துன்பம்
யாவும் நிறைந்தது

மு.அருமைச்சந்திரன், கறுக்காய்

### வாராத சாமிகள்...

மரங்கள் கீழும்
குளங்கள் தோறும்
சாமி சிலைகள்
இருந்தும் என்ன
யாரும் வரவில்லையே
கூப்பிட்ட குரலுக்கு...!
எல்லா நாட்டு சாமிகளும்
என் வீட்டுசாமி அறையிலே
இருந்தும் என்ன
யாரும் வரவில்லையே
முள்ளிவாய்க்காலுக்கு...!

மட்டுவில் ஞானக்குமரன்

### எரிமலையாய்...

உயிரும் போச்சு!
வாழ்க்கையும் போச்சு!
எல்லாமே போச்சுது!
நடந்தது நடந்ததுதான்
அதற்காக நடந்ததை
மறந்துவிட்டுப்போக
நடந்தது என்ன நாடகமா?
எரிமலை குமுறிக்
கொண்டிருக்கிறது!
மண்ணுக்குள் அல்ல
மனித மனங்களுக்குள்!

உயிரோவியன்

### இமயம் தொட...



எப்போதுமே உன்பாதை
நேர்வழியாக இருக்கட்டும்
ஆனால் பார்வையை
பல கோணப்படுத்து
நல்லதையும் தீயதையும்
பகுத்தறியப் பழகு
விளக்கின் அடியிலும்
வெளிச்சம் தேடு
நீரை விடுத்து
பாலை அருந்தும் அன்னம்

மாவை. நா.கஜேந்திரா


### ஏதிலியாய்...



பேச்சிலும் மூச்சிலும்
வேற்றுமை பாடி
வேறுபட்டு நிற்றலே
எம் தேச வழமை
சிறுமதியால் செருக்கடைந்து
ஒன்றிலிருந்து
இரண்டாக அதிலிருந்து
மற்றொன்றாக
பந்திக்கொரு கட்சியாய்
சந்திக்கொரு கழகமாய்
உலக மாந்தர்கெல்லாம்
ஏளனப் பொருளாய்
ஏதிலியாய் செல்வதற்கு
ஏங்கி நிற்கிறோம்
இதில் யாருக்கும்
வெட்கமும் இல்லை
துக்கமும் இல்லை

ஞானி

## மௌனத்தின் தேடல் – 74



### மீளாதா?

மரத்தோடு இவனின்
பயணம்
மரணித்துப் போனது
மாண்டுபோன
கடந்தகாலம்
மண்ணைத்
தொட்டுவிடுமா?

ஜெ.கிறிஸ்துவராஜா

### எப்போது உணர்வாய்

ஏய் மனிதா
வேகம் விவேகமல்ல
அதை நீ உணரும்
வரை விபத்துகளுக்கும்
பஞ்சமில்லை
உயிர்ப் பலிகளுக்கும்
குறைவில்லை

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

### கரைசேரவில்லை

கடலோரம் வண்டியை
நிறுத்தி
கையில் மதுபானத்துடன்
கடலுக்குள் சென்றவன்
மீண்டும் கரைசேரவில்லையோ!

வி.ரூபி, நவாலி

### வயதுப்பாடமா?

வந்த வயது கோளாற்றின்
அந்தர புத்தியினாலோ?-உந்நிலை
அந்தோ ஆப்பிழுத்த
குரங்கின் நிலையானதோ?

பொ.புனிதன்
வரியப்புலம்

### போர் வெறி

குருதியை வியர்வையாக்கி
உழைத்தெடுத்த எம்
சொத்துக்களை
அழித்தொழித்தது போர் அது
அவற்றை அள்ளி
வழங்கிடுமா?

சு.சி.தமிழினி, சுன்னாகம்

### பலிகொண்டது

காலன் கதை பேசினான்
காசாய் வந்து உன்
உருவாகினான்
பாலன் என்னை ஏற்றி சென்று
பலியாக்கினான்

ச.பானுஜன்
யா/நெ.ம.ம.வி

### சாட்சியம்...!

நீயும் என்னைப் போல்
ஈழத்தில் நிர்க்கதியான
பிரஜையோ?
நான் இழந்திருப்பது
என் இதய சுவாசங்களை...
நீயோ இழந்திருப்பது
உன் உயிர் தரும் எஞ்ஜினை!

குறிஞ்சிக்கவி குப்பிளான்

### தட்டுத்தடுமாறி

கையடக்கத் தொலைபேசியில்
மெய்மறந்து கதைத்துக்கொண்டு
மதுபோதையில் வாகனத்தை
வேகமாய்ச் செலுத்தும் போது
கட்டுப்பாட்டை இழந்து
விபத்துக்குள்ளாகி உயிரிழப்பது
அன்றாடம் வரும் செய்திகள் தானே

துரை, தென்மட்டுவில்

### மாறியது

நாட்டுப் பிரச்சினை
மோட்டு இம்சையானதால்
மோட்டார் வண்டிகூட
மனிதனோடு வேண்டாம்
வாழ்க்கையென்று
மரத்தோடு வாழுதுபார்

ஜெயம் ஜெகன்
புதுக்குடியிருப்பு

### நிஜம்

கண்ணுக்குள் நிகழும்
கற்பனையல்ல இது
கண்முன்னே நடக்கின்ற
நிஜம் தான் இது!

பு.ஜீவனா
கரவெட்டி

### சொல்லிவிடு

மரமே...
உன்னுடன் இருக்கும்
மோட்டார் சைக்கிளை
பிரியாது வைத்திருப்பதை
உன் அசைவுகளால்
காதருகே சொல்லிவிடு
குழந்தைகளை காப்பகத்தில்
விட்டுச் செல்பவர்களுக்கு...

சி.சுகனியா
புலோலி

### பிரிந்துவிடும்...!

பத்திரமான பாவனையை
பந்தயக்குதிரை போன்று
பட்டயம் கொண்டு
விரட்டினால் உந்திய உரு
உடைந்துவிடும்
குந்திய உயிர்
பிரிந்துவிடும்!

பே.ஜான்சிகிறேசியா
கிளிநொச்சி

### தேடலென்ன?

கள்ளக்கடத்தலிற்கா?...
காயப்பட்ட விடுதிக்கா?...
கொள்ளையடிப்பதற்கா?...
வண்டியை மௌனிக்கவிட்டு
ஓட்டுநர் மறைவிடம்
சென்றுள்ளார்

ந.வினோரூபன்
யா/நெல்லியடி மத்திய ம.வி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 75

**அன்பு வாசகர்களே !**




உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 17.06.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பிரான்ஸிற்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மாணவர்கள்



பிரான்ஸ் நாட்டிற்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொள்வதற்காக வடமாகாணத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் தெல்லிப்பழை யாழ். மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த தரண்யா மணிசேகரம், வவு/தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அலஸ் ஜோயல் ஆசன் ஆகிய இருவருமே தெரிவாகியுள்ளனர்.

மேற்படி கல்விச் சுற்றுலா நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமாகிய நாமல் ராஜபக்ஷவின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பங்களாதேஷூக்கும் இலங்கைக்குமிடையில் கடல்போக்குவரத்து ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

பங்காளதேஷ் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் கடல் நடவடிக்கைகள் தொடர்பான சேவை ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இலங்கையின் சார்பில் துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் ரோகித அபேகுணவர்த்தன மற்றும் பங்களாதேஷ் சார்பில் அந்த நாட்டின் கடற்சேவைகள் அமைச்சர் சாஜான் கான் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதன்போது கருத்துரைத்த பிரதியமைச்சர் ரோகித அபேகுணவர்த்தன, இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான சகோதரத்துவம் வலுப்படுவதாக குறிப்பிட்டார்.

அத்துடன் கடல் போக்குவரத்து தொடர்பில் இருநாடுகளும் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக நன்மை பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இலங்கையர்கள் 30 பேரே நாடு கடத்தப்பட உள்ளனர்

## பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் தெரிவிப்பு

தமிழர்கள் உட்பட இலங்கைப் பிரஜைகள் 30 பேரை நாடு கடத்தவுள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

முன்னதாக 300 பேர் எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் அரசியல் புகலிடம் மறுக்கப்பட்ட 30 பேரே திருப்பியனுப்பப்படவுள்ளதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது.

இதில் எத்தனை தமிழர்கள் என்ற விடயத்தை அந்த உயர்ஸ்தானிகரகம் தெரிவிக்கவில்லை. (ஸ்ரீ-2)

# பத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பிரதிபொலிஸ்மா அதிபர்களாக பதவியுயர்வு

(கொழும்பு)

பத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதி பொலிஸ் மா அதிபர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த பதவி உயர்வுகள் நாளை திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தப்படும் என அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆர்.எம்.வீரசூரிய, டி.எல்.எஸ்.ஜி.எல். பீரிஸ், ஜே.குலத்திலக, ரி.கே.பி.டி. சில்வா, மற்றும் ஜி.திசாநாயக்க ஆகிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களே இவ்வாறு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இது தவிர எம்.கே.டி. டபிள்யூ அமரசிங்க, டபிள்யூ.அபேநாயக்க, ஆர்.டபிள்யூ. எம்.சிரணவண, என்.டி.தலுவத்த மற்றும் ஏ.ஆர். வைத்திய லங்கார ஆகிய் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பிரதி பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஜூன் 20 முதல் 26 வரை தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமாக பிரகடனம்

(கொழும்பு)

டெங்கு தொற்றானது தற்போது நாடு முழுவதும் பெருமளவு வியாபித்துள்ளது. இதன் காரணமாக மீண்டும் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை அமுல்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனிடையே கொழும்பு நகரத்தில் திம்பிரிகஸ்யாய பகுதியிலேயே டெங்கு நோயாளர்கள் அதிகம் உள்ள பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் மைத்திபால சிறிசேனவின் தலைமையில் இந்த பிரதேசத்தில் உள்ள வீடுகள் சோதனை செய்யப்பட்டதுடன் சிரமதான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் போது கருத்துரைத்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரையில் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# தமிழக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு நம்பிக்கையை அளித்துள்ளது

## இந்திய ஊடகம் தெரிவிப்பு

தமிழக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இலங்கை தமிழர்களுக்கு ஊக்கத்தை அளித்துள்ளதாக இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


இலங்கையில் சிங்கள அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றங்களை நடத்தி வருகிறது.

அத்துடன் போரின் போது இந்து ஆலயங்கள் உட்பட்ட தமிழர்களின் கலாசார மையங்கள் அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு தமிழக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஆறுதலை அளித்துள்ளன.

அதேநேரம் தமிழக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறிப்பாக சட்டசபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மேற்கொண்டமை இந்திய மத்திய அரசாங்கத்துக்கு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய 10 ஆவது ஆண்டு நிறைவுதினக் கொண்டாட்டத்தையொட்டி இடம்பெற்ற கொடிதின நிகழ்வு வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நிதியத்தின் தலைவர் கைலாசநாதன் கொடிகளை வழங்கி வைப்பதையும் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், கணக்காளர் ஞா.லோகநாதன், ஓய்வூதிய உத்தியோகத்தர் திருமதி ஜெயமாலா திருத்தணிகைநாதன், நிதியத்தின் உபதலைவர் என்.சண்முகவேல், உப செயலாளர் எஸ்.நடேசு, பொருளாளர் பொ.கமலநாதன், நிர்வாக உறுப்பினர் எஸ்.ஜெயராஜா, பி.மகேந்திரதாசன் மற்றும் உறுப்பினர் த.தேவராஜா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

Hatton National Bank
Two Decades of Microfinance in Sri Lanka

## அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.03.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 18.06.2011 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியா விட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

*அல்லது*

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி

HNB

(C-3448)

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# சர்வதேச அழுத்தத்திற்கு முகம் கொடுக்கும் இலங்கையும் பாகிஸ்தானும்





இலங்கை மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுநர் குழுவின் அறிக்கையை எதிர்த்து ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை சார்பாகப் பேசிய நாடுகளில் பாகிஸ்தான் பிரதான பங்கு வகிக்கின்றது.

இலங்கை எந்தவொரு பிரச்சினையை முகங்கொடுக்கின்ற வேளையிலும் பாகிஸ்தான் அதற்கு எப்போதும் துணையாயிருப்பது வழமையாகும். பாகிஸ்தான் இதனை அண்மையில் இடம்பெற்ற ஐ.நாவின் மனிதஉரிமைகள் கூட்டத் தொடரின் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

"இலங்கை தனது நாட்டின் தேசிய அமைதியைப் பேணுவதற்கு அனைத்துலக சமூகம் ஒத்துழைப்பு நல்க வேண்டும்" என இஸ்லாமிய அமைப்பின் சார்பாகப் பேசிய பாகிஸ்தானின் தூதர் சாமிர் அக்ரம் தெரிவித்திருந்தார்.

பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட வல்லுநர்களின் இலங்கை தொடர்பான அறிக்கையானது இரண்டாந்தரத் தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், இதனை ஒருபோதும் ஆதாரமாக கொள்ள முடியாது எனவும் இவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான குழுவை பான் கீ மூன் நியமிப்பதற்கு முன்னர், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான பெனசீர் பூட்டோவின் கொலை தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்கான குழுவும் சிலவேளைகளில் நியமிக்கப்பட்டிருக்கலாம்.

இலங்கையிற்கான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஐ.நாவின் வல்லுநர் குழுவில் அங்கம் வகிக்கும் இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சுகி தருஸ்மன் பாகிஸ்தான் தொடர்பான விசாரணைக்குழுவிலும் அங்கம் வகிக்கின்றார்.

இலங்கையைப் போலல்லாது, பூட்டோவின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஒரு குழுவை அமைக்குமாறு பாகிஸ்தானிய அரசாங்கம் பான் கீ மூனைக் கோரியிருந்தது.

இதனடிப்படையில், பூட்டோவின் கொலைக் குற்றச்சாட்டு தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து, இதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெறவேண்டும் என்ற அடிப்படையில் ஐ.நாவின் விசாரணைக்கு முகம் கொடுப்பதென பாகிஸ்தான் தீர்மானித்திருந்தது.

ஆனால், குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னர் பூட்டோவின் கொலை தொடர்பான விசாரணை அறிக்கை வெளிவந்த போதிலும், இதனுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இன்னமும் இனங்காணப்படவில்லை.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட பாகிஸ்தானிய அரசாங்கம் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது.

ஆனால் இலங்கை விடயத்தில், இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்பின் மத்தியில் அதன் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக பான் கீ மூன் தனது வல்லுநர் குழுவை நியமித்திருந்தார்.

தனது நாட்டில் இடம்பெற்ற கொலைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அனுமதியை ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுநர் குழுவிடம் வழங்கியிருந்த பாகிஸ்தான், இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஐ.நாவின் வல்லுநர் குழுவால் தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கையை மறுப்பதில் தீவிரமாகச் செயற்பட்டுள்ளது.

இவ்விரு நாடுகளுடன் தொடர்புபட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான ஐ.நாவின் வல்லுநர் குழுக்கள் ஒவ்வொன்றிலும் மூன்று உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

**பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் ஏன் அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களிற்கும் முகம்கொடுக்க வேண்டியுள்ளன?**

**இதற்கான பதிலை விபரித்து கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில ஊடகமான டெய்லிமிரரில் அதன் பத்தி எழுத்தாளர் உபுல் ஜோசப் பெனாண்டோ எழுதியுள்ளார். அதனை புதினப் பலகைக்காக மொழியாக்கம் செய்தவர் நித்தியபாரதி.**

## தமிழ்நாட்டின் தற்போதைய நிலை ஆயுத வன்முறையாக வெடிக்கலாம்

இவ்விரு குழுவிலும் மர்சுகி தருஸ்மன் அங்கம் வகிக்கின்றார்.



பாகிஸ்தானின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் அதன் இரகசியப் புலனாய்வுப் பிரிவு போன்றவை பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவி செய்துள்ளன என்ற குற்றச்சாட்டு ஏலவே முன்வைக்கப்பட்டுள்ளதால் ஐ.நா வல்லுநர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான தனது ஆதரவை வழங்குவதில் பாகிஸ்தான் தயக்கம் காட்டுகின்றது.

அல்குவைதா தலைவரான பின்லேடனின் நிதியுதவியுடன் ஆட்சியமைத்துக் கொண்ட பாகிஸ்தானிய அரசாங்கத்தின் அதிபராக உள்ள பெனாசீர் பூட்டோவின் கணவரான சர்தாரி, பூட்டோவின் கொலைச் சம்பவத்தின் பின்னணியில் அல்குவைதாவின் ஆதரவு இருந்ததாக முன்னர் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில், தற்போது பாகிஸ்தானின் அதிபராக உள்ள சர்தாரியின் கீழ் உள்ள பாகிஸ்தானிய இரகசியப் பாதுகாப்புப் பிரிவினால் தான், பின்லேடன் அபோதாபாத்தில் ஒழித்து வைக்கப்பட்டிருந்தார்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரண்டும் அவர்களது பிழையான நடவடிக்கைகள் காரணமாக தற்போது அனைத்துலக நாடுகளின் அழுத்தங்களிற்கு உட்பட்டுள்ளன.

பாகிஸ்தான் தனது நாட்டில் நிலவும் பயங்கரவாதத்தை சரியாக கட்டுப்படுத்தியிருந்திருந்தால், பாகிஸ்தானின் வான் எல்லைக்குள் நுழைந்து அமெரிக்கா பின்லேடனை வான்தாக்குதல் மூலம் கொல்ல முடியாதிருந்திருக்கும்.

அமெரிக்காவைப் போல இந்தியாவும் தனது வான்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து பயங்கரவாதிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தலாம் என பாகிஸ்தான் மனதளவில் பீதியடைந்துள்ளது.

இந்தியா அபோதாபாத் நடவடிக்கை போன்று ஏதாவது முயற்சியில் ஈடுபடுமாயிருந்தால், பெரியதொரு அழிவை இந்தியா சந்திக்க வேண்டியிருக்கும் என பாகிஸ்தானின் வெளியுறவுச் செயலர் சல்மன் பசிர், இந்தியாவை எச்சரித்துள்ளார். ஆனால், உயர் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கராச்சியிலுள்ள பாகிஸ்தான் கடற்படையினரின் மெஹெரன் விமானத்தளம் மீது தலிபான்கள் மேற்கொண்ட முற்றுகைத் தாக்குதலானது, பாகிஸ்தானின் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்புக்களின் நடவடிக்கைகள் மீது சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இவ்வாறு பயங்கரவாத அமைப்புக்களிற்கும் பாகிஸ்தானிய பாதுகாப்புப் பிரிவுகளிற்கும் இடையிலான தாக்குதல் நடவடிக்கைகளில்,



பாகிஸ்தானின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் தொடர்ச்சியாக தோல்வியுற்று வருகின்றமையானது, தனது அணுவாயுத வலைப்பின்னல் உள்ளடங்கலான அரச மூலோபாய வளங்களை, 2007ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தானுக்குள் பலம் பெற்று வரும் பயங்கரவாதிகளின் தாக்குதல்களிலிருந்து பாகிஸ்தான் எவ்வாறு பாதுகாக்கப் போகின்றது என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

பாகிஸ்தானின் அணு உலை நிலையங்கள் மீதும் அதனுடன் தொடர்புபட்ட வளங்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படுமாயின் அது பெரும் அழிவை ஏற்படுத்துவதாகவே அமையும்.

இதன் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இராணுவ வளங்களையும் அழிக்கும் நோக்கில் பயங்கரவாதிகளால் பாகிஸ்தானிய கடற்படைத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் PC - Orion 3 என்ற கடல்சார் நடவடிக்கைகளை வேவு பார்க்கும் இரண்டு வான்கலங்கள் அழிக்கப்பட்டன.

ஷா, சர்கொடா, கம்றா போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த குறைந்தது மூன்று அணு ஆயுத நிலைகள் பயங்கரவாதிகளின் அண்மைய தாக்குதல்களுக்கு உள்ளாகின.

பாகிஸ்தானின் அணுசக்திப் பலம் தீவிரவாதக் குழுக்களின் கைகளுக்கு சென்றுவிட்டால், அது மிகப் பெரிய அழிவுகளை ஏற்படுத்தும் என்ற பயமும் அச்சுறுத்தலும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கும் கூட இந்தப்பயம் உள்ளது.

இதனால், பயங்கரவாதிகளை இல்லாதொழிப்பதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சிகளையும் பாகிஸ்தானிய அரசாங்கம் இது வரையிலும் மேற்கொள்ளவில்லை என அனைத்துலகமும் பழி சுமத்துகிறது.

இதைப் போலவே, போர் முடிவுற்றதன் பின்னர் இணக்கப்பாட்டை உருவாக்கிக் கொள்வதற்கான, எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சிகளிலும் இலங்கை அரசாங்கம் ஈடுபடவில்லை என அனைத்துலக சமூகம் இலங்கை அரசாங்கம் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நிலைப்பாடானது ஆயுத வன்முறையாக வெடிக்கலாம் என இந்தியா கருதும் அதேவேளையில், அமெரிக்காவானது இது இந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையலாம் எனக் கருதுகிறது.

இவ்வாறானதொரு சூழலில், பாகிஸ்தான் தனது நாட்டில் அதிகரித்து வரும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை முற்றாக அழித்தொழிக்க முயற்சிப்பதுடன், இலங்கை தனது நாட்டில் வாழும் இனக்குழுமங்களுக்கிடையே நல்லதொரு இணக்கப்பாட்டை மேற்கொள்வதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்.

இவ்வாறு இரு நாடுகளும் தமது நாடுகளின் நலன்களில் அதிகம் அக்கறை செலுத்துமிடத்து, அனைத்துலக நாடுகளின் அழுத்தங்களிலிருந்து இவை தப்பித்துக் கொள்ளலாம்.

# கேபிள் கட்டணம் மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் 20 ஆயிரம் கோடியை பெற்றது கருணாநிதி குடும்பம்

## ஜெயலலிதா தெரிவிப்பு



இலவச கலர் தொலைக்காட்சி வழங்குவதற்காக 7.48 இலட்சம் தொலைக்காட்சிகள் விநியோகம் செய்வதற்கான ஓடர் இரத்து செய்யப்படுகின்றது. ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டுள்ள 1.27 இலட்சம் கலர் தொலைக்காட்சிகள் அனாதை இல்லங்கள், பாடசாலைகள், ஊராட்சிகள், துணை சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றுக்கு வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

ஒரு ஆண்டுக்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் என்றால் ஐந்து ஆண்டுகளில் கேபிள் கட்டணம் மூலம் கருணாநிதி குடும்பம் பெற்றது 20 ஆயிரம் கோடி ரூபாய் என்ற திடுக்கிடும் தகவலையும் வெளியிட்டார்.

சட்டசபையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்துக்கு முதல்வர் அளித்த பதிலுரையில்,

கடந்த ஐந்து ஆண்டுகளில் கலர் தொலைக்காட்சி வழங்க 3 ஆயிரத்து 687 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்தப் பணம் மக்களின் வரிப்பணம். ஆனால் இந்த கலர் தொலைக்காட்சியைப் பார்க்க கட்டணம் பெற்றது. கேபிள் தொழிலில் கோலோச்சி இருக்கும் கருணாநிதியின் பேரன்கள், கலாநிதி, தயாநிதி, துரைதயாநிதி போன்றவர்கள் தான்.

கருணாநிதியின் குடும்பத்துக்கு கேபிள் கட்டணமாக ஆண்டுக்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் மக்கள் செலுத்தினர். மக்கள் வரிப்பணத்தில் 3 ஆயிரத்து 687 கோடி செலவழித்து ஆண்டுக்கு 4 ஆயிரம் கோடி தனது குடும்பம் பெற வழி செய்து விட்டார்.

ஒரு ஆண்டுக்கு 4 ஆயிரம் கோடி என்றால் ஐந்து ஆண்டுகளில் கேபிள் கட்டணம் மூலம் அந்த குடும்பம் பெற்றது 20 ஆயிரம் கோடி ரூபாய். எனவே கலர் தொலைக்காட்சி வழங்கும் திட்டம் சொந்த நலனுக்காக தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்டது என ஆணித்தரமாக சொல்வேன்.

இப்படித்தான் அனைத்து இலவச திட்டங்களும் இருந்தன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதால் மற்ற திட்டங்கள் பற்றி விளக்கவில்லை. இவ்வாறு முதல்வர் பேசினார். (ஸ்ரீ)

# குறைகளை சுட்டிக்காட்டும் கட்சியாக

## தே.மு.தி.க. செயற்படும்–விஜயகாந்த் தெரிவிப்பு

குறைகளை சுட்டிக்காட்டும் கட்சியாக தே.மு.தி.க. செயற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார். சட்டசபையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில், ஆளுநர் உரையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மக்கள் நலத்திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இதை வரவேற்கின்றேன். ஊழல் இல்லாத ஒரு நிலையை உருவாக்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண் டும். அரசு நிர்வாகத்தில் அடிமட்ட அளவில் எதற்கெடுத்தாலும் மக்களிடம் இலஞ்சம் வாங்கும் நிலை இருக்கின்றது. இந்த நிலையை முதல்வர் மாற்ற வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)


16 ஆம் நாள் நினைவஞ்சலி

28.05.2011இல் இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தின் குலவிளக்கு

அமரர் சுப்பையா மாரிமுத்து



குடும்பத்தின் குலவிளக்காய்
எம்மோடு நீரிருந்தீர்
அரை மாதம் ஆகியதோ
நாம் உமைக் காணாது!
முத்தான சொத்தாக
எம்முடன் நீரிருப்பீர்
எப்போதும் பிரகாசமாய்–எம்
மனத்தினுள் ஒளிர்ந்து கொண்டு!

உமது ஆத்மா சாந்தியடைய நாம் கலட்டி வீரகத்தி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்,
வளர்மதி (மனைவி), லோகபிரகாசினி (மகள்), வி. பிரணவன் (உடன் பிறவா சகோதரன்), சித்தப்பாமார்: அமரர் து.வைத்திலிங்கம் குடும்பம் (யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்), து.மகாதேவன் குடும்பம், து.சிவபாலன் குடும்பம், து.சுரேந்திரன் குடும்பம், து.விவேகானந்தக் குருக்கள் குடும்பம், மைத்துனர் சி.ஸ்ரீ தயாளக்குருக்கள் குடும்பம், உடன் பிறவா சகோதரர்கள்: ம.ரவிசங்கர், சு.நிரூஜன், சு.கஜரூபன், சு.செந்தூரன்.

வண். வடகிழக்கு,
கலட்டி வீரகத்தி விநாயகர் கோவிலடி.

(5164)


# காங்கிரசோடு கூட்டணி தொடரும்

## தி.மு.க.தீர்மானம்

(சென்னை)

தேர்தலில் தோல்வி, அடுத்தடுத்து கைதுகள், ஊழல் புகார்கள் என தி.மு.க.விற்கும் காங்கிரசுக்குமான உறவில் விரிசல் இருக்கலாம். தி.மு.க.–காங்கிரஸ் கூட்டணியைவிட்டு வெளியேறிவிடும் என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தி.மு.க.வின் உயர்நிலைச் செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் மாலை அண்ணா அறிவாலயத்தில் நடந்தது.

கட்சியினரின் பலதரப்பட்ட கருத்துக்களையும் கேட்ட பின்னர் சில பல தீர்மானங்களோடு முடிந்து போனது தி.மு.க.வின் உயர் நிலைக் கூட்டம். அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி, காங்கிரஸ் கூட்டணியில் இருந்தும் மத்திய அமைச்சரவையில் இருந்து தி.மு.க.வெளியேறாது. ஆனால் சிபிஐ தொடர்ந்துள்ள வழக்குகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் உள்ளிட்ட சில தீர்மானங்களோடு தமிழக அரசின் சமச்சீர் கல்வி தொடர்பாகவும் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது தி.மு.க. (ஸ்ரீ)

# காங்கிரஸ் கூட்டணி நீடிப்பில் கருணாநிதி-அழகிரி இழுபறி

(சென்னை)

காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. தொடர்ந்து நீடிப்பது குறித்து அக்கட்சியின் தலைவர் கருணாநிதிக்கும் மத்திய அமைச்சர் அழகிரிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக தெரிய வருகின்றது.

காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலக வேண்டும் என தி.மு.க.வின் தலைவர் கருணாநிதி முடிவு செய்துள்ளதாகவும் ஆனால் காங்கிரஸ் கூட்டணியை முறிக்கும் முடிவை தற்போது எடுப்பது நல்லதல்ல என அழகிரி கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் தங்களை இலக்கு வைத்து காங்கிரஸ் கட்சி செயற்பட்டு வருவதாக தி.மு.க. கருதுகிறது. இதையடுத்து காங்கிரஸ் கூட்டணி தொடர்பில் மறுபரிசீலனை செய்ய நேற்று முன்தினம் மாலை உயர்மட்டக் கூட்டத்துக்கு தி.மு.க. அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில் இக்கூட்டத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை முதல் மூத்த தலைவர்களுடன் கருணாநிதி ஆலோசனை நடத்தியுள்ளார். இக்கூட்டத்தில் காங்கிரஸ் கூட்டணியில் தொடர்ந்தும் நீடிக்கக் கூடாது என்று கருணாநிதி கூறியதாகவும் அதை அழகிரி உள்ளிட்டோர் எதிர்த்ததாகவும் தெரிய வருகிறது. (ஸ்ரீ-2)


1ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

பூவாய் 27.09.1989 சருகாய் 23.06.2010

செல்வி தனுஷா கமலநாதன்



முல்லைச் செடியில் முளைத்த
சிறு முல்லைக் கொழுந்தே
துள்ளிக் குதித்த தோகை மயிலே
எல்லை இதுவென இறைவன் அழைத்தாரோ?
கல்லாய் இருக்கவென–தனுஷா
கடன்பட்டே வேறிதயம் சுமக்கிறோமே!
நூற்றாண்டு வாழ்வாயென நேர்ந்திட்டோம்
சுக்குநூறாகியதே எம் கனவெல்லாம்
உம் பிரிவின் ஓராண்டில் கண்ணீரால்
நனைகின்றோமே...
பாரினிலே பல்கலையாய் நிலைத்து நின்றாய்
பாவி... பாவி... யென எம் தலைமேல் அடித்தோமே
பாவை நீ அங் நயமாய் தூங்கு அம்மா!

நாச்சிமார் கலட்டி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(சி-3447)



2011றக்கான புதிய அனுமதிகள்

புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளன.

BIT Bachelor of Information Technology

Join Sri Lanka'S#1

ESOFT The Leader in Professional ICT Education

University of Colombo School of Computing

உங்கள் நுழைவுக்கான வழி

3 A/L Passes (Any Stream) → BIT DEGREE

Without A/Ls → FIT

கொழும்பு பல்கலைக்கழக நுழைவு, பரீட்சைப் பதிவுகள் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

உங்கள் பாடநெறியினை தெரிவு செய்யும் வழிகள்

- BIT Plus Programme (முழுநேரம்)
- BIT Year 1 (பகுதி நேரம்)

புதிய உஆவது பிரிவு 18.06.2011

- 10 வருட அனுபவமிக்க ஆசிரியர் குழாம்.
- மீட்டல் பயிற்சி நெறிகள் தலைமையக விரிவுரையாளர்களால் வழங்கப்படும்.
- ISO தரச் சான்றிதழ் பெற்ற இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட கணனி கல்லூரி.
- சிறந்த விரிவுரையாளர்களால் உருவாக்கப்பட்ட 30 பாடவிதானங்கள், வினாக் கொத்துக்கள் இலவசம்.
- பயிற்சி முடிவில் கொழும்பு பல்கலைக்கழக சான்றிதழும் தொழில்வாய்ப்பை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

(சி-3453)

25% Discount For University, Tec Students Government Employees

கடந்த 4 ஆண்டுகளாக எமது மாணவர்களே தங்கப்பதக்கம், முதற்தர சித்திகளைப் பெற்றுள்ளார்கள்



Ravith Bothejue 2008 · Danuka Lakmal 2009 · Udara Senanayake 2010

ESOFT Computer Studies (PVT) Ltd
NO.166/3,
Navalar Road, Jaffna.
T.P.: 021 222 4142
Web:www.esoft.lk

வடமாகாண கிளைகள்

| | | |
|---|---|---|
| கிளிநொச்சி | 021 2285444 | இல.1, கனகபுரம் வீதி. |
| வவுனியா | 024 2226060 | 115, மில் வீதி. |
| மன்னார் | 023 2223377 | Convent வீதி, சின்னக்கடை. |
| சாவகச்சேரி | 021 2270333 | பெரிய அரசடி. |

# ஐந்தறிவு படைத்த உயிரினங்களுக்கு காட்டப்படும் காருண்யம் கூட தமிழர்களுக்கு காட்டப்படுவதில்லை

## அரியநேத்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

விசர்நாய்களைக் கொல்வது ஒரு காருண்யமான செயல் அல்ல என அரசு கூறுகின்றது. ஆனால், வடக்கில் உள்ள தமிழர்கள் கொல்லப்படுகின்றபோது இந்த காருண்யம் எங்கே போய்விட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 9 ஆம் திகதி விலங்கு தொடர்பான சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதற்கான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கு -கிழக்கு பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்களை விலங்கு போன்ற மனப்பாங்குடன் இங்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நடத்தியதன் காரணமாகத்தான் ஒரு உரிமையற்ற இனமாக நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களை விலங்குகளாக பார்க்கின்ற மனோபாவத்திலிருந்து முதலில் விடுபடுகின்றபோது மட்டும்தான் அதாவது தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வு கொடுக்கப்பட வேண்டும் என்ற மனோபாவம் இந்த அமைச்சர்களுக்கு வரும்போதுதான் தமிழர்களும் இங்கு மனிதர்களாக மதிக்கப்படுவார்கள் அல்லது எங்களை ஐந்தறிவு படைத்த விலங்குகளாகப் பார்க்கின்ற மனோபாவம் கொண்ட நீங்களும் ஐந்தறிவு படைத்த மிருகங்களே என எண்ணத் தோன்று கின்றது.

எனவே, ஐந்தறிவு படைத்தவை மிருகங்கள் என்றும் ஆறறிவு உள்ளவர்கள் மனிதர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. இதில் ஐந்தறிவு படைத்த நாய் நன்றியுள்ள மிருகமாகச் சொல்லப்படுகின்றது. இவற்றில் எனக்கு ஒரு மாற்றுக் கருத்து இருக்கின்றது. அதாவது நாய் மனிதர்களுக்குத்தான் நன்றியுள்ள விலங்காக உள்ளதே தவிர நாய் நாய்களுக்கு நன்றியுள்ள மிருகமாகத் தெரியவில்லை.

அதேபோன்று மனிதர்கள் மனிதர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இல்லாததனால்தான் இந்த அரசியல் தீர்வு இன்று பின்னடைந்து கொண்டு செல்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அவைகளுக்கான மேய்ச்சல் தரைகளாக வெல் லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒதுக்கப்பட்ட காணிகள் இன்று யுத்தத்திற்கு பிற்பாடு வெளி மாவட்டங்களில் இருந்து வருகின்ற சிங்கள மக்கள் அத்துமீறி அந்தக் காணிகளை அபகரிக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது.

இதனால் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளை வளர்க்க முடியாத ஒரு சூழ்நிலை இப்போது உருவாகின்றது.

எனவே, இந்த அத்துமீறிய குடியேற்றங்கள் நிறுத்த வேண்டும் என நாங்கள் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

வட கிழக்கிலே இருக்கக்கூடிய பல இடங்களில் விசர்நாய்களின் தொல்லைகள் உள்ளன. விசர்நாய் என்று கூறுகின்றபோது வடகிழக்கிலே இருந்த இராணுவமுகாம்களில் இருந்த விசர்நாய்கள் தற்போது முகாம்கள் அங்கிருந்து அகற்பட்ட பின்பு வெளியில் வந்து மக்களைக் கடிக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த விசர் நாய்களில் இருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பது? நாய்களைக் கொல்வது ஒரு காருண்யமான செயல் அல்ல என அரசு கூறுகின்றது.

எனவே, வட கிழக்கில் உள்ள தமிழர்கள் கொல்லப்படு கின்ற போது இந்த காருண்யம் எங்கே போய் விட்டது என கேட்கத் தோன்று கின்றது.

எனவே, இந்த விசர்நாய்களில் இருந்து வடகிழக்கில் உள்ள தமிழ் மக்களைக் காப்பாற்ற அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பயங்கரவாதத்தை அழித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டோமென கூறுகின்ற இந்த அரசாங்கம் விசர் நாய்களை கட்டுப்படுத்த வழியின்றி இருக்கின்றது.

எனவே, தமிழ் மக்களையும் விலங்குகளாகப் பார்க்காமல் மனிதர்களாக மதித்து எங்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

(ஸ்ரீ-2)

# எரிபொருள் விற்பனை நிலையம் தீக்கிரையானதில் வர்த்தகர் உயிரிழப்பு

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா சுதந்திரபுரம் பகுதியில் உள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையம் தீக்கிரையானதில் வர்த்தகர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, மின்சாரம் தடைப்பட்ட வேளையில் குறித்த வர்த்தகர் குப்பி விளக்கை ஏற்றி வைத்துவிட்டு கடைக்குள் இருக்கும் தனது அறையில் சென்று வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது திடீரென விளக்கு சரிந்து தீப்பிடித்ததில் கடை முழுவதும் தீக்கிரையானது.

விற்பனை நிலையத்திலிருந்து வெளியே வரமுடியாத நிலையில் மேற்குறித்த வர்த்தகர் அகப்பட்டுக் கொண்டார்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வேலு பன்னீர்ச்செல்வம் (வயது-47 )என்ற வர்த்தகரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மரண விசாரணையை அடுத்து வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-3)


## 200 புகையிரத கடவைகளுக்கு பாதுகாப்பு சமிக்ஞைகள்

(கொழும்பு)

பாதுகாப்பு சமிக்ஞைகளற்ற 200 புகையிரத கடவைகளில் ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் சமிக்ஞை விளக்குகளுடன் மின் சாரத்தில் இயங்கும் மணிகளையும் பொருத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

நாட்டில் தற்போது 915 புகையிரதக் கடவைகள் உள்ளதுடன் இவற்றில் 303 பாதுகாப்பு சமிக்ஞைகள் பொருத்தப்படாத நிலையில் உள்ளன. (ஸ்ரீ-2)




யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்திற்கும் இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக மன்றத்திற்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த 30 ஆம் திகதி இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக மன்றத்தின் தலைவர் விஜய ரத்நாயக்க, யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்ற தலைவர் கனகசபை பூரணச்சந்திரன் ஆகியோருக்கிடையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டது.

# அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சியில் இரு பாடசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணை மற்றும் அவுஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பளை மகாவித்தியாலயம், மாசார் மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகள் 100 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பழைய சேதமுற்ற கட்டடங்கள் அனைத்தும் அகற்றப்பட்டு புதிதாக மூன்று மாடிக் கட்டடங்கள் அவ்விடத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி கட்டடக் கட்டுமானப் பணிகளை அவுஸ்திரேலிய பாராளுமன்ற செனட்குழுவினருடன் இணைந்து வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் ஆகியோர் பார்வையிட்டனர்.

இக்கட்டுமானப் பணிகள் யாவும் எதிர் வரும் ஓகஸ்ட் மாதமளவில் நிறைவு பெறுமென வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# கைதிகளுக்கு உணவு கொண்டுசெல்ல அனுமதி மறுக்கப்படுவதாக முறைப்பாடு

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை பார்வையிடச் செல்லும் உறவினர்கள் உணவுப் பண்டங்களை கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்படுவதாக காணாமல் போனோரை தேடியறியும் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அக்குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சில தினங்களாக கொழும்பு சிறைச்சாலைகளில் கைதிகளை பார்வையிட செல்லும் தமது உறவினர்கள் கொண்டு செல்லும் உணவுப் பண்டங்களை கைதிகளிடம் ஒப்படைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக அரசியல் கைதிகளின் உறவினர்களால் காணாமல் போனோரை தேடியறியும் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக காணாமல் போனோரை தேடியறியும் குழுவின் போசகர் கலாநிதி விக்கிரமாகு கருணாரட்ண மூலம் சிறைச்சாலை ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் விளக்கமளிக்கையில், உணவுப் பொருட்கள் மூலமாக போதை வஸ்துப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதால் அதை கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தார்.

இந்த பதிலில் திருப்தியடையாத கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, தமிழ் அரசியல் கைதிகளிடமும் இத்தகைய நடைமுறை மேற்கொள்ளப்படுவதாக கைதிகளின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை மேற்கொள்வதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார். எனவே அரசியல் கைதிகள் இது தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டால் அது தொடர்பாக எமக்கு அறியக்கிடைத்தால் அவற்றிற்கான தீர்வை பெற்றுத்தர நாம் நடவடிக்கை மேற்கொள்வோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ-2)

## ஆஸியில் தடுப்பிலுள்ள இலங்கைத் தமிழர் ஆர்ப்பாட்டம்

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் ஒருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக டார்வின் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான ஆதரவு வழங்கும் வலையமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த இலங்கைத் தமிழரை அவுஸ்திரேலிய புலனாய்வுத்துறையினர் பாதுகாப்பு தொடர்பான விசாரணைகளுக்காக சுமார் 20 மாதங்கள் தடுத்து வைத்துள்ளனர்.

இதன் காரணமாகவே குறித்த நபர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக டார்வின் வலையமைப்பின் பேச்சாளர் கார்ல் ஓகொனர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான் உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும். – சீனப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழினத்தின் கருவறுத்த துயரத்தில் நடக்கின்ற சந்திப்புகள்

இந்திய உயர் மட்டக் குழுவொன்று இலங்கைக்கு வருகைதந்து ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களைச் சந்தித்துவிட்டு நாடு திரும்பியுள்ளது.

இந்திய உயர்மட்டக் குழுவின் இலங்கை விஜயமானது முழுக்க முழுக்க ஈழத்தமிழர்களுடன் தொடர்புபட்டதென்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே இந்திய உயர்மட்டக் குழு இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றிய விபரங்களை அறியும் ஆவலும் உரிமையும் எமக்குத் தாராளமாக உண்டு.

ஏனெனில் இலங்கை அரசுடன் இந்தியா நடத்தும் பேச்சுவார்த்தை என்பது தானாக நினைந்து நடத்தப்படுவது அல்ல.

மாறாக ஈழத் தமிழர்களின் கருவறுத்த கடும் துயருக்குப் பின்பாக பழிதவிர்க்க முடியாத நிலையில், இலங்கையுடன் பேசுதல் என்ற முடிபிலேயே இந்தியாவின் வருகை அமைந்துள்ளது.

கூடவோ ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகள் அரங்கேறுமாக இருந்தால், ஈழத் தமிழர்களின் மிகப்பெரும் அவலநிலைக்கு இந்தியாவும் காரணம் என்ற பழிச்சொல் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்குமாறு இலங்கை அரசை வலியுறுத்துவதையாவது செய்தாகவேண்டும் என்ற நிலைப்பாடு இந்தியாவிடம் உண்டு.

இதனடிப்படையில் இந்திய உயர்மட்டக்குழுக்கள் இலங்கைக்கு வந்துசென்றாலும், அதற்குள் ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணையிலிருந்து இலங்கையைக் காப்பாற்றுவது எப்படி என்ற விடயமும் மூடிய அறைக்குள் பிரஸ்தாபிக்கப்படவே செய்யும்.

எதுவாயினும், இலங்கை அரசும் இந்திய மத்திய அரசும் நடத்துக்கின்ற சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள் ஈழத் தமிழினத்திற்கு விடிவு தருவதாக– அடிமைத்தனத்திலிருந்து மீட்சி பெறுவதாக– கடந்தகால இனக்கருவறுப்புக்கள் போன்ற தாங்கொணாத் துன்பம் எக்காலத்திலும் ஏற்படாதவாறான உரிமைச் சுதந்திரத்தை தருவதாக இருக்க வேண்டும்.

அத்தகைய உரிமையைத் தரும் எண்ணப்பாடு இலங்கை அரசிடம் இருக்கும் என்று இம்மியும் கூறமுடியாது.

அத்தகைய சிந்தனை சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்திருக்குமாயின், இனப்பிரச்சினை எப்போதோ முடிபுக்கு வந்திருக்கும்.

எனவே, தீர்வை வழங்குவதில் "வலியன்" ஆக இருக்கின்ற இலங்கையிடமிருந்து அதனைப் பெறுவதென்பது சாதாரண விடயமன்று.

ஆக, வலியனை வழிப்படுத்துவதற்கும் பல வியூகங்கள் உண்டு. அந்த வியூகங்களை இந்தியா இறுக்கமாகப் பிரயோகிக்கவேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகும்.

இங்கு காலதாமதத்திற்கு இடம்கொடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வலியன் வலுப்பெறும் என்பது கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும்.

# பத்தினித் தெய்வத்திற்கு விழா எடுத்து வன்னிப்பிரதேசம் எங்கும் விழாக்கோலம்


வன்னிப்பிரதேசத்தில் கண்ணகி அம்மனுக்குப் பல வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. அவற்றில் வற்றாப்பளையும் ஒன்றாகும். வன்னிக்கிராமங்கள் பலவற்றிலும் கண்ணகி அம்மனுக்குரிய வழிபாட்டிடங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஆண்டுதோறும் வைகாசித் திங்களிலே இங்கெல்லாம் கண்ணகி அம்மனுக்கு சிறப்பாகப் பொங்கல் விழா நடைபெறுகின்றது.

முள்ளியவளையிலும் வற்றாப்பளையிலும் நடைபெறுகின்ற பொங்கல் வழிபாடு ஏனைய இடங்களில் இல்லாத பல சிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. முள்ளியவளையில் இரண்டு வாரங்களாக நடைபெறுகின்ற விழாவின் இறுதிநாள் நிகழ்வு வற்றாப்பளையில் நடைபெறுகின்றது. வன்னிப் பிரதேசத்தவர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி பிரதேச பெருவிழாவாக நடைபெறும்.

வற்றாப்பளையில் நடைபெறுகின்ற

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் நாளை ஆரம்பம்

பொங்கல் விழாவுக்கு முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயம் முதன்மைப் படுத்தப்படுகின்றது. முள்ளியவளையிலிருந்து ஆறுமைல் தொலைவில் உள்ள சிலாவத்தைக் கடலில் இருந்து உப்புநீர் எடுத்து வந்து முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் அம்மனுக்கு முதல்வாரம் முழுவதும் கடல்நீரிலே விளக்கெரியும் அதிசயம் நடைபெறுகின்றது.



பொங்கல் நிகழ்வின் ஆரம்ப நிகழ்ச்சி முதலாவது திங்கட்கிழமை முள்ளியவளையில் இடம்பெறுகின்ற பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமாகின்றது. பொங்கல் கடமைகளைச் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அதிகாலை புறப்பட்டு 7 அயற்கிராமங்களில் இருந்தும் பூசைக்குரிய மங்களப் பொருட்களைச் சேரித்து வருவார். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்களை மஞ்சல் துணியிலே கட்டி கோவிலில் உள்ள வேப்பமரம் ஒன்றிலே தொங்கவிடுவார்கள். இந்நிகழ்ச்சியே பாக்குத் தெண்டல் எனப்படும்.

இத்தகைய சடங்கு ரீதியான வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு பொங்கல் நிகழ்ச்சி நடைபெறும். காலைமுதல் இரவிரவாக அடியவர்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டுள்ள ஊர்ப் பெருவிழாவாகவே பொங்கல் நிகழ்ச்சி நடைபெறும். இதுவே முள்ளியவளையில் நடைபெறுகின்ற இறுதி நிகழ்ச்சியாகும்.

முள்ளியவளையில் இருந்து மீண்டும் கண்ணகை அம்மனின் உருவத்தையும் பூசைக்குப் பயன் படுத்தி எஞ்சிய புனித தீர்த்தத்தையும் வேறு பூசைப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு வற்றாப்பளைக்குச் செல்லும் பூசைக்குழுவினர் அங்கு இறுதிப் பொங்கல் நிகழ்ச் சியை நடத்துவார்கள். வற்றாப்பளையில் நந்திக் கடற்கரையில் பெருமரங்க்ள் சூழ்ந்த சோலை வெளியில் கண்ணகியின் ஊர்விழாவைக் காண இலங்கையில் பல்வேறு பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் வந்து கூடுவார்கள். இவ்வாறான அம்மன் இங்கு பத்தாவது இடமாக வந்து குடியேறியதாக ஐதீகம்.

இதனால் பத்தாப்பளை என அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் இது மருவி வற்றாப்பளையாக மாறியது என்பது வரலாறு.

**வே.ம.இந்திரநாதன்**

# தூய ஆவியானவரால் புத்துயிர் பெறுவோம்

ஆண்டவரின் ஆவியானவர் தாம் விரும்பும் இடமெல்லாம் அசைவாடிக் கொண்டிருக்கிறார். படைப்பின் ஆரம்பத்தில் தண்ணீரில் அசைவாடிக் கொண்டிருந்த தூய ஆவியானவர் இன்று உலகின் முகத்தை புதுப்பித்துக் கொண்டிருக்கும் ஆற்றலாய், சக்தியாய் எங்களுள் இருந்து செயற்படுகிறார். கிறிஸ்துவின் ஆவியானவரை ஒருவன் கொண்டிராவிடில் அவன் கிறிஸ்தவன் அல்லன்.

கடவுளின் ஆவியானவரால் யார் இயக்கப்படுகிறார்களோ அவர்களே கடவுளின் மக்கள். (உரோ:8:14). தூய ஆவியானவர் தான் "இருளின் அதிகாரத்தில் இருந்து எம்மை விடுவித்து " (கொலோ 1:13) ஒளியின் மக்களாக மாற்றினார். ஏனெனில் கிறிஸ் து என்னும் தெய்வீக ஒளியை பின்பற்ற வழிகாட்டுபவர் அவர் தான். ஆனால் அவரை பின் செல்லாத காரணத்தினால் இருளில் நடந்தோம் (எபே:5:3-6) இருளின் செயல்களை செய்தோம் (கலா:5:19-21) துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளானோம். வேதனைகளையும் சோதனைகளையும் வாழ்வில் சுமந்து நிம்மதியிழந்தோம்.


மாறிவரும் சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் பல்வேறு தாக்கங்களுக்கு இரையாகின்றனர். திரைப்பட மோகம், அடிமைப்படுத்தும் அரசியல், போதைப் பொருட்கள், கவர்ச்சியை காசாக்கும் நாகரிகமோகம் போன்றவை மனிதர்கள் அன்றாடம் சந்திக்கும் வாழ்க்கை அனுபவங்கள். இவ்வுலகில் பணம் சம்பாதிக்க கற்றுத்தரும் கல்வி; காலையில் இருந்து மாலை வரை நம் உணர்வுகளையும் உளநிகழ்வுகளையும் கையாள்வதற்கு உதவுவதில்லை. இதனால் தான் நாம் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் தேடலின் விளைவாக எமது வாழ்வில் விடைகாணா பல கேள்விகள் தொங்கி நிற்கின்றன. இதற்கு விடையளிக்க வல்லவர் தூய ஆவியானவரே!

ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை தேர்ந்தெடுத்த காலம் முதல் சொல்லொணாத் துன்பங்களும், வேதனைகளும் அவர்களை நெருங்கியதை தொடக்க கால திருச்சபை வரலாற்றில் காண்கின்றோம். இயேசுதான் ஆண்டவராகிய மெசியா என்று சாட்சியம் கூறி உலகமே வியக்குமளவிற்கு பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்த அந்த ஆவியின் மக்களுக்கு அக்காலத்தில் உலகம் கொடுத்த பரிசு சித்திரவதைகளும் சிறையடைப்புக்களுமாக இருந்தது. பலர் கொலை செய்யப்பட்டார்கள், சிலர் விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டார்கள், பெருமளவானோர் பலதரப்பட்ட வாதைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

## பரமபிதா காட்டிய பாதை

எனினும் அவர்களுக்கு அது வேதனையாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள் தூய ஆவியானவரோடு பயணித்தார்கள். தங்களில் உறைந்திருக்கும் ஆவியானவருக்காக எதையும் இழக்க தயாராக இருந்தார்கள். நாம் எங்களுடைய வாழ்விலே துன்பங்கள் எழுகின்ற போது பல கேள்விகளை எங்களுக்குள்ளே எழுப்புவது வழக்கம். ஏன் எங்களுக்குத் தான் இவையெல்லாம் வருகின்றன என்று புலம்புவது வழமை. ஏனெனில் பயனுள்ள அர்த்தமுள்ள நல்ல வாழ்வு வாழ்ந்தாலும் படுகுழிக்குள் தள்ளி விடும் உலகிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாமும் அதனுடன் ஒத்திசைந்து கொண்டிருக்கின்றோம்.

நாளும் துன்ப சுமைகளைசுமர்ந்தவர்களாக, கவலையோடும் கண்ணிரோடும், பசியோடும் பிணியோடும் விடிவே கிடையாதா என்று சாவை நோக்கி வாழ் ந்து கொண் டிருக்கும் எங்களுக்கு தூய ஆவியானவர் உண்மையான அமைதியையும் விடுதலையையும் தரமாட்டாரா? வாழ்வில் நம்பிக்கை இழந்து ஒவ்வொரு கணமும் சாவை தங்கள் ஆதாயமாகக் காணும் மக்களுக்கு தூய ஆவியானவர் விடுதலை வாழ்வு தருவாரா? எமக்கு புத்துயிர் அளிப்பாரா? அமைதித் தென்றலை வீசச் செய்து எம் வாழ்வில் மகிழ்ச்சி தருவாரா? என்பதே எங்கள் ஒவ்வொருவரினதும் ஏக்கமும் எதிர்பார்ப்புமாகவுள்ளது. நமது ஆத்துமத்தின் உயிராக திருச்சபையின் உயிர்மையமாக வாழ்கின்றார். ஞானத்தை ஊட்டி மனித பயத்தைப் போக்கி தெய்வ பயத்தை




உண்டாக்கி அன்புச் சுடரை ஒளிர செய்து என்றும் எம்முடன் வாழும் பரிசுத்த ஆவியை எங்களின் இதயத்தில் சுமப்போம். துன்புறும் எம் மக்களுக்கு நம்பிக்கையூட்டி புத்துயிர் அளிக்க வல்லவர் அவர் தான் என்ற அசையாத நம்பிக்கையோடு அவர் எங்களை ஆட்கொள்ள எங்களை முற்றுமுழுதாக அவருக்கு கையளிப்போம்.

**ம. பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

# இலங்கையில் புதிய தொழில் நுட்பத்துடன் TVS JIVE அறிமுகம்

பாதுகாப்பானதாகவும் விசேட தன்மைகளை உள்ளடக்கியதாகவும் வடிவமைக்கப்பட்டு உள்நாட்டு சந்தையில் வெற்றி நடைபோடுகின்றது.

TVS லங்கா தனியார் நிறுவனமா னது யுனைட்ட் மோட்போஸ் மற்றும்TVS இந்தியா ஆகிய நிறுவனங்களுக்குட்பட்டதாகும். இந்நிறுவனமானது தனது புதிய அதியுயர் தொழில்நுட்பத்துடனான மோட்டார் சைக் கிளை இலங்கை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப் படுத்தியுள்ளது. TVS JIVE மாசி மாத நடுப் பகுதியில் அறிமுகப் படுத்தப் பட்டு வியத் தகு வளர்சியையும் கண்டுள் ளது. இம் மோட் டார் சைக்கிளின் மிக முன்னேற்றமான தொழில் நுட்பமானது முக்கிய தேவைகளையும் பல விசேட நன்மைகளையும் பாவனையாளர்களுக்கு வழங்குகின்றது.



மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு வாகன நெரிசலான பாதைகளில் பயணம் செய்வது எந்நாளும் ஒரு கடினமான அனுபவமாகவே இருந்துவந்துள்ளது. ஆனால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள JIVE மூலமாக மேட்டார் சைக்கிளை செலுத்துவது மனமகிழ்ச்சியான விடயமாகும்.

இலங்கையில் முதன் முறையாக TVS நிறுவனமே அதன் 110cc, Clutch (கிளச்) அற்ற தொழில்நுட்பத்துடனான மோட்டார்சைக் கிளை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ் அபூர்வமான தொழில் நுட்பமானது சிறந்த பாதுகாப்பை வழங்குவ துடன் மோட்டார்சைக்கிள் பாவனையாளர்களது பொது வாகன பிரச்சினையான, மிகக் குறைந்த வேகத்தில் செலுத்தும் போது ஏற்படும் Brake Clutch மற்றும் Gear உடன் தொடர்புடைய சடுதியான இயந்திர நிறுத்தத்திலிருந்து பாதுகாப்பளிப்பதுடன் ஓர் புதுமையான இனிய அனுபவத்தினையும் அளிக்கின்றது.




JIVE இனுடைய நிறுத்தமற்ற இயந்திர நுட்பமானது ஆபூர்வமான விசேட அம்சமாகும். தன்னிச்சையாக Gear உடன் இணை ந்து செயற்படும் Clutch ஆனது உங்களது இடது கைக்கு விடுதலையளித்து மோட்டார் சைக்கிளை செலுத்தும் கைப்பிடியினை உறுதியாக பற்றிக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. Rotary Gear மற்றும் Easy Gear மாற்றத்தின் மூலம் உங்களது மனிதசக்தி சேமிக்கப்படுகின்றது. JIVE யினுடைய படி முறையான Gear மாற்றமானது முந்திய கால மோட்டார் சைக்கிள்களின் Gear மாற்றத்தின் போது ஏற்படும் அசௌகரியங்கள் அற்ற முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. Electric Self Stat Gear Indicator மூலம் சரியான Gear இல் சரியான வேகத்தில் மோட்டார்சைக்கிள் செலுத்தப்படுகின்றமையை தங்களுக்குக் தெரியப்படுத்துகின்றமையினால் எரி பொருள் மீதமாக்க உதவுகின்றது.

TVS JIVE எரிபொருள் சிக்கனமானது. ஒரு லீற்றர் பெற்றோல் 60-65 கிலோமீற்றர் வரை செல்லக் கூடியது. மற்றும் T-matic தொழில் நுட்பம் மேலதிக உந்து சக்தியையும் ஒப்பற்ற விசேட அம்சங்களையும் வழங்குகின்றது.

TVS JIVE அறி முகப்படுத் தப்பட்ட ஒரு மாத காலத் திற்குள் உறுதியான வளர்ச்சியையும் பாவனையாளர்களது நன்மதிப்பையும் வென்றுள்ளது.

**விளம்பர விபரணம்**

# பச்சைத் தேயிலையும் அதன் மகத்துவமும்



நீங்கள் சாதாரணமாக கறுப்புத் தேயிலையைப் பற்றி அறிந்திருப்பீர்கள். ஆனால் Green tea ஐ பற்றி அறிந்திருப்பது மிக குறைவு. புத்துணர்ச்சி அளித்து நம்மை சுறுசுறுப்பாக இருக்க பயன்படும் சாதாரண தேயிலையில் காணப்படும் Caffeine இன் அளவை விட பச்சைத் தேயிலையில் காணப்படும் Caffeine அளவு மிகக் குறைவு.

சாதாரணமாக தேயிலையைத் தயாரிக்கும் முறையை பொறுத்து தேயிலையின் தயாரிப்பு வகைகள் 3 வகைப்படும்.

I. பச்சைத்தேயிலை (Green tea)
II. ஊலுங்தேயிலை (oolong tea)
III. கறுப்புத் தேயிலை (Black tea)

தரமான தேயிலைகள் வழமையாக ஏற்றுமதி செய்யப்படும் தூள் தேயிலைகளே (Dust tea) உள்நாட்டில் விற்கப்படுகிறது.

இந்த மூன்று வகைத் தேயிலைகளில் பச்சைத்தேயிலை(Green tea) மற்றும் கறுப்புத் தேயிலை(Black tea) என்பன மிகச் சிறந்தவை. அதிலும் குறிப்பாக (Green tea) இன் மருத்துவக் குணம் நம்மை ஆச்சரியப்படுத்தும் வகையில் உள் ளது. பெயருக்கேற்றவாறு இதன் நிறம் பச்சையாக இருக்கும். இந்த இயற்கையான பச்சைத் தேயிலை நம் உடல் நலத்திற்கு அவசியமான விற்றமின்களையும் கனியுப்புக்களையும் கொண்டுள்ளது.

* Green tea மற்றைய தேயிலையிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றது?

தேயிலையை பக்குவப்படுத்தும் முறையில் தான் சிறிய வித்தியாசம். பறித்த கொழுந்து இலைகளை withering செய்து பின் roller இட்டு rolling செய்து பின் Fermontation செய்யப்படும். Fermontation செய்யும் போது தேயிலையின் நிறம் பச்சையாக இருந்து மெல்லிய கறுப்பு நிறமாக மாற்றமடையும். பின் dryerஇல் இட்டு firing செய்யும் போது கறுப்பாக அதுவும் கடும் கறுப்பாக மாற்றமடையும்.இந்த முறையில் உருவாகிய தேயிலையே நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் கறுப்புத் தேயிலையாகும் (Black tea).

ஆனால் பச்சைத் தேயிலையானது இந்த படிமுறையில் காணப்படும் Fermontation என்னும் படி முறைக்குள் அகப்படாது (அதாவது Fermontation செய்யப்படு வதில்லை). நேரடியாக அதற்குரிய dryer இல் இட்டு firing செய்யப்படும். இதனால் தேயிலையின் இயற்கைத்தன்மை மற்றும் நிறம் பாதுகாக்கப்படுகின்றது. இதனுடைய ருசியும் taste மணமும் smell மற்றையவையை விட சிறப்பாக இருக்கும்.

* நாம் தற்போது Green tea ஐ அருந்துவதால் ஏற்படும் மருத்துவப்பயன்களை பற்றிப்பார்ப்போம்.

Antioxidant இன் முக்கியத்துவம் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். நம் உடலில் உள்ள திசுக்கள் பல காரணங்களால் சேதம் அடைகின்றன. இந்த சேதத்தைக் கட்டுப்படுத்த நம் உடலில் இயற்கையாக Antioxidant உள்ளது. ஆனால் சில சூழ் நிலைகள் காரணமாக உடலில் உள்ள Antioxidant இன் அளவு போதுமானதாக இருப்பதில்லை. ஆனால் நாம் உண்ணும் உணவில் இயற்கையாக உள்ள vitamin C (விற்றமின்C), விற்றமின்E, Beta-carotene போன்ற Antioxidant பணியைச் செய்கின்றன. ஆக நாம் இளமையாக நோயின்றி வாழ Antioxidant உள்ள உணவு மிக அவசியமாகும். இந்த பச்சை தேயிலையில் (Green tea) இவ்வகை விற்ற மின்களும் Beta-carotene உள்ளன. இதில் carotene polyphenols உம் மற்றும் பகுதியாக epigollo catechin gallatee (EGCG) உள்ளது.

இதில் catechin காணப்படும் கீழ் கண்ட மருத்துவப் பண்புகளை கொண்டுள்ளது.

* புற்று நோய்களிலிருந்து பாதுகாப்பு
* கொலஸ்ரோலின் அளவைக் குறைக்கும்
* இதயத்துடிப்பை பாதுகாத்தல்
* இரத்தத்தில் குளுக்கோசின் அளவு திடீரென உயர்வதைக் கட்டுப்படுத்தல்
* உணவைக் கேடு பண்ணும் பற்றீரியாவிலிருந்து பாதுகாப்பு
* அலர்ஜியிலிருந்து (ஒவ்வாமை) பாதுகாப்பு

* பச்சைத்தேயிலையானது எவ்வாறு புற்றுநோயைக் குறைக்கிறது?

பச்சைத் தேயிலையை குடித்து வரும் பெண்கள் புற்று நோய் ஏற்படும் ஆபத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

Green tea காணப்படும் Catechin Polyphenols மற்றும் epigello catechin gallate (EGCG) கொண்டது. EGCG ஆனது வலுவான anti-oxidant இது cancer cell இன் வளர்ச்சியை தடுப்பதோடு ஏனைய இழையங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் cancer cell ஐ கொல்கின்றது. அத்துடன் வாய், இரப்பை, நுரையீரல், குடல், தொண்டை மற்றும் மார்பு புற்று நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கின் றது அந்த anti-oxodant.

20-87 வயதுக்குட்பட்ட மார்பகப் புற்றுநோய்குள்ளான 1009 பெண்களை உள்ளடக்கிய 200 சீன பெண்களிடம் நடாத்தப்பட்ட ஆய்வில் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. பச்சைத் தேயிலையை பயன்படுத்தியோருக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

* பற்களின் உறுதித்தன்மையை பேணுமா பச்சைத் தேயிலை?

உணவைக் கேடுபண்ணும் பற்றீரியாவிலிருந்து பாதுகாப்பதன்மூலம் எமது பற்களை நாம் உறுதித் தன்மையுடன் பேண முடியும்.

தினமும் 4-5 கோப்பை பச்சை தேயிலை அருந்துவதன் மூலம் தூரவிலகி நிற்கலாம் என்பது மருத்துவ ஆராய்ச்சியின் முடிவு.

பச்சைத்தேயிலையானது நுண்ணுயிர்களின் பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கும். “கெரிரென்” என்கின்ற இரசாயன பொருளிளைக் கொண்டுள்ளது. பற்சிதைவை ஏற்படுத்தும் பற்றீரியாவைக் கட்டுப்படுத்த இதில் இயற்கையாக உள்ள புளோரைட் Fluoride பயன்படுகிறது. பச்சைத் தேயிலையை அருந்துவதன் மூலம் பற் சுகாதாரத்தினை மேம்படுத்த முடியும்

* இதய நோயிலிருந்து தடுக்குமா இந்தப் பச்சைத் தேயிலை?

தேநீர் பருகும் பழக்கமுள்ளவர்கள் பச்சைத்தேயிலை Green tea மூலம் தயாரிக்கப்படும் தேநீரை அருந்தினால் இரட்டிப்பு பலனை பெறலாம்.

பச்சைத் தேயிலையில் flaranoids இதயத்தில் உள்ள இரத்த ஓட்டம் சீராக இருப்பதற்கு துணைபுரிகிறது. இதயத்துடிப்பை பாதுகாப்பதன் மூலம் இருதயம் சார்ந்த நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தேயிலையில் உள்ள polyphenols என்றழைக்கப்படும் antioxidant மனித உடம்பின் உயிரிரசாயன இயக்கங்களுக்கும் மிகுந்த பயனை அளிக்கிறது. இதனால் மாரடைப்பு வருவது குறைக்கப்படுகின்றது.

கிரீக் நாட்டின் மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் முடிவின் படி பச்சைத் தேயிலை மூலம் தயாரிக்கப்பட்ட தேநீர் 125 மில்லிகிராம் Caffeine உடன் 450 மில்லிலீற்றர் வெந்நீர் ஆகியவை வெவ்வேறு நேரங்களில் (4-5)முறை கொடுக்கப்பட்டது.இதில் பச்சைத் தேயிலை மூலம் தயாரிக்கப்பட்ட தேநீரை பருகியவர்களின் இதயத் துடிப்பு சிறப்பாக செயற்பட்டது.

* எலும்புசார் நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுவது எப்படி?

எலும்பு வளர்ச்சிக்கு அவசியமான (mn) மங்கனீசும், பொட்டாசியம்(k) $B_1$, $B_2$, $B_6$ போன்ற விற்றமின்களும் folicacid (போலிக் அமிலம் ) போன்றவையும் பச்சைத் தேயிலையில் காணப்படுகிறது.

அண்மையில் ஒவரியோவில் உள்ள வெஸ்ட்ரேன் ரிசர்வ் யுனிவர்சிடியின் (case western Reserve University Cleve Land) சமீப ஆராய்ச்சியின் படி மூட்டுவலி( ஆர்ட்ரிடிஸ்) நோயின் தன்மையை இந்தப் பச்சைத் தேயிலையில் உள்ள polyphenols குறைக்கின்றது.

**பச்சைத்தேயிலையிலிருந்து தேநீர் தயாரித்தல்**

மற்றைய தேயிலை போன்று இதைக் கொதிக்க வைக்கக்கூடாது. தேநீர் தயாரிக்க 70-85°C வெப்பம் போதுமானது. தண்ணீரை கொதிக்கவைத்து 2-5 நிமிடங்கள் வைத்தால் சரியான வெப்பநிலைக்கு வந்துவிடும்.

பின் தேவையான பச்சைத்தேயிலை ஒரு குவளையில் (glass)போட்டு சிறிது வெந்நீரை தேயிலையில் மூடும் அளவிற்கு ஊற்றி உடனே தண்ணீரை கீழே ஊற்றி விடவும். இதனால் தேயிலை கழுவப்படுவது மட்டுமன்றி அதிலுள்ள Caffeine இன் அளவும் ஓரளவு குறைக்கப்படும். அதன்பின் தேவையான வெந்நீரை ஊற்றி 2-3 நிமிடங்கள் ஊறவைக்கவும். இதில் பயன்படுத்தப்பட்ட தேயிலையை இன்னும் சில முறைகள் வெந்நீர் விட்டு அருந்தலாம். கண்டிப்பாக பால் இதனுடன் சேர்க்கக் கூடாது.

சீனியைத் தவிர்ப்பது நல்லது. சுவையை மேலும் அதிகரிக்க ‘‘தோலுடன் வெட்டிய எலும் மிச்சம்பழத்தின்’’ சிறிய துண்டை தேநீரில் போட்டு குடிக்கலாம். பச்சைத் தேயிலையை கொதிக்க வைப்பதன் மூலம் அதன் தன்மை மாறிவிடும்.எனவே மேலே கூறியபடி தேநீரை தயாரித்து மணம்-சுவை-மருத்துவக் குணமுடைய தேநீரை அருந்துவோமாக...

**சி.ரமேஷ்**
**மூன்றாம் வருட மாணவன்.**
**விவசாய ஏற்றுமதி கற்கைகள்**
**ஊவா வெல்லஸ்ச**
**பல்கலைக்கழகம்.**

# அறிவுத்துறையில் பெண்களின் எழுச்சிக்கு வழிகாட்டியாக விளங்கும் பேராசிரியர்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதற் பெண் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் கௌரவிப்பு விழா இன்று சாவகச்சேரி சிவன்கோவில் வீதியிலுள்ள தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறுகிறது.

வரலாற்றுக்கு முந்திய காலகட்டம் தாய்வழிச் சமூகமாகவே விளங்கியது. காரணம் பொருட்களில் கூட பெண்மையைக் கண்டு மதிப்பளிக்கும் நிலைமை ஒரு காலத்திலிருந்தது. தாய்மொழி, தாய் நாடு, பூமாதேவி, கங்காதேவி என்ற எண்ணக்கருக்கள் இந்த அடிப்படையிலேயே ஏற்பட்டன.

உற்பத்திச்செயற்பாட்டில் ஏற்பட்ட விரிகை விவசாயம் சார்ந்த பொருளாதாரத்தை முதன் மைப்படுத்தியது. இதனால் தந்தை வழிச் சமூகத்தின் மேலாதிக்கம் இயல்பாகவே மேற்கிளம்பியது.

பெண் எனப்படுபவள் இன விருத்திக்கான ஓர் இயந்திரம் எனப் பார்க்கப்படும் நிலைமை காணப்பட்டது. இத்தகைய மனோநிலையிலிருந்து பெண்களை மீட்டெடுத்தது அவர்களின் அறிவாயுதமே ஆகும்.

அறிவுப் பொருளாதாரத்தின் பெருக்கம் ஆண்,பெண் சமத்துவத்திற்கும் பெண்நிலை வாதத்தின் எழுச்சிக்கும் வழிகோலியது. இத்தகைய பின்புலத்திலேயே எமது மண்ணில் பெண்களின் எழுச்சியை நோக்க முடிகிறது.

மாநகர மேயர், அரச அதிபர், மற்றும் திணைக்கள உயர் நிர்வாகிகள் என எங்கள் பிரதேசங்களில் பெண்கள் எழுச்சியடைந்துள்ளனர்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் என்ற சிறப்பை எங்கள் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பெற்றுள்ளார்.

இளமைக் கல்வியை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றார்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இவர் பெற்ற உயர் பெறு பேற்றைக் கௌரவப்படுத்தி பாடசாலைக்கு அரைநாள் விடுமுறை வழங்கப்பட்ட நிகழ்வை இன்றும் மகளிர் கல்லூரிச் சமூகம் நினைவில் கொண்டுள்ளது.

உயிர் இரசாயனத்துறையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு முதல் பிரிவில் சித்தியடைந்ததன் மூலம் 1984ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உதவி விரிவுரையாளராக உள்வாங்கப்பட்டார். தொடர்ந்து பல பதவிகளில் முன்னேறி இன்று துணைவேந்தராகியுள்ளார்.

நகர்ப்புறப் பாடசாலைகளை நாடும் எண்ணம்கொண்ட மாணவர்களுக்கிடையில் எங்கள் பிரதேசப் பாடசாலைகளில் கற்பதன் ஊடாக வாழ்க்கையில் அரிய சாதனைகளை மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கையை இவரது உயர்வு போதிக்கிறது.

அவரது ஆங்கிலப் புலமையும், ஆளுமைத்திறமும் அவர்தம் வாழ்க்கை நெறிகளும் நம் எல்லோருக்கும் நல்ல பாடமாகும்.

–சிவத்திரை சிவநாதன்
அதிபர்,
சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

# மக்களைத் திசை திருப்பும் நாடகமே சட்டசபைத் தீர்மானம்– கலைஞர்

(சென்னை)

இந்திய மத்திய அரசு ஏனைய நாடுகளுடன் இணைந்து இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது மக்களை தவறாக வழிநடத்துவதற்காக கையாளப்பட்ட பழைய தந்திரோபாயம் என தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திமுகவின் தலைவருமான மு. கருணாநிதி விமர்சித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்திலுள்ள முரசொலிமாறன் வளாகத்தில் திமுகவின் தலைவர் கருணாநிதி தலைமையில் நேற்று நடந்த உயர்நிலை செயல்திட்டக் குழுவின் கூட்டத்தின்போது இலங்கை தொடர்பாக தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு திமுக ஆதரவு வழங்கியிருந்தது.

ஆனால் திமுகவையும் அக் கட்சியின் தலைவர் கருணாநிதியையும் கடுமையாகத் தாக்கி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஆற்றிய உரைக்கு திமுக நிறைவேற்றுக்குழு கண்டனம் தெரிவித்தது.

2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கைதுசெய்து இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும் என அதிமுக தீர்மானம் நிறைவேற்றியதையும் திமுக சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இலங்கைப் படைத்தரப்பினர் தமிழ் மக்களை கொல்ல முற்படவில்லை எனவும் போரின் போது அப்பாவி மக்களும் கொல்லப்படத்தான் செய்வார்கள் என முன்னர் ஜெயலலிதா கூறியதற்கும் திமுக கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கச்சதீவை இலங்கைக்கு வழங்குவது தொடர்பான தீர்மானத்தை மறு பரிசீலனை செய்யுமாறு 1974ஆம் ஆண்டு திமுக நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதாகவும் அக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

2011ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் கச்சதீவை மீளப்பெற மத்திய அரசை வலியுறுத்தியிருந்ததாகவும் திமுக தெரிவித்திருந்தது. (ந-5)

# சட்டசபைத் தீர்மானம் ஆறுதல் தருகிறது– விஜய்

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் அமைதியோடும் உரிமைகளோடும் வாழ இறைவனை வேண்டிக்கொள்கின்றேன் என்று நடிகர் விஜய் கூறியுள்ளார். இது தொடர்பாக நடிகர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து போர்க்குற்றம் புரிந்ததாக ஐ.நா. சபையால் போர்க்குற்றவாளி என்று அடையாளம் காட்டப்பட்டவர்களுக்குதண்டனைவாங்கித்தரவேண்டும் மற்றும் இலங்கைத் தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதகம் விளைவித்த இலங்கை அரசிற்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கும் தமிழக முதல்வர் ஜெய்லலிதாவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

உரிமைகளையும் உடைமைகளையும், உறவுகளையும் இழந்து பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது ஆறுதலான விடயம். இனிவரும் காலங்களில் இலங்கைத் தமிழர்கள் அமைதியோடும், உரிமைகளோடும் வாழவேண்டும். அதற்காக இறைவனை வேண்டிக் கொள்கிறேன். இவ்வாறு நடிகர் விஜய் தனதறிக்கையில்கூறியுள்ளார். (ந-5)

# மண்டைதீவில் இன்று கும்பாபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு திடுதிருக்கை ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணி முதல் 12.00 மணி வரையான சுப நேரத்தில் இடம்பெறும். கும்பாபிஷேகத்தை சிவசிறி விவஸ்வத மூர்த்திக் குருக்கள் நடத்திவைப்பார். (ந)

# 13-ம் திருத்த...

உள்ளிட்ட வெளிநாடுகளில் அழுத்தங்களின் அடிப்படையில் வடக்கு மக்களுக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதாக அரசாங்கம் கூறி வருகிறது.

ஆனால் இதுவரையில் அவ்வாறான எந்த தீர்வும் முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையில் 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வு ஒன்றை வழங்க விருப்பதாக அரசாங்கம் கூறிவருகிறது.

அவ்வாறு எனின் அதன் விளக்கம் என்ன என்பதை மக்களுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி கோரியுள்ளது. (ந-5)

# இந்திய உயர்மட்டக் குழுவினருடன் அமைச்சர் டக்ளஸ் உரையாடல்

(கொழும்பு)

அரசியல் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கவேண்டும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் ஆகியோர் அடங்கிய இந்திய உயர்மட்டத் தூதுக்குழுவிடம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தியமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கான விஜயம் மேற்கொண்ட இந்திய உயர்மட்டத் தூதுக்குழுவினருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசி மூலம் கலந்துரையாடினார்.

இதன்போது இனப்பிரச்சினை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைப்பது குறித்த ஆலோசனையை முன்வைத்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதன் மூலம் சகல தரப்பினரும் அதில் அங்கம் வகிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். எனவே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தடைகள் அற்ற நிலையில் தீர்வினை இத் தூதுக்குழு மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்த அமைச்சர் இத் தெரிவுக்குழுவானது குறிப்பிட்ட ஒரு கால அவகாசத்திற்கு உட்பட்டதாக அமைக்கப்படவேண்டும் எனவும் கூறியுள்ளார். (ந-5)

# அரசியல் தீர்வில் இந்தியா தலை...

காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இவர்கள் சந்திப்பை மேற்கொண்டனர்.

சுமார் இரண்டுமணி நேரம் நீடித்த இந்த சந்திப்பை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்தனர்.

இதையடுத்து புதுடில்லி புறப்படமுன்னர் இந்திய ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்ட இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தமிழக் கட்சிகளிடம் பேசிவிரைவாக அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்தவிடம் வலியுறுத்தி கூறியதாக தெரிவித்தார்.

அதேவேளை அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா தலையிட மாட்டாது என்றும் அது இலங்கையை பொறுத்தவிடயம் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை பகிரும் வகையில் அரசியல் தீர்வாக 13ஆவது திருத்தத்தை விடவும் அதிகமான அதிகாரங்களை பகிரத் தயாராக இருப்பதாக அரசு ஏற்கனவே அறிவித்திருக்கிறது.

இந்த நிலையில் அந்த அரசியல் தீர்வை அரசு விரைவாக நடைமுறைப்படுத்தும் என்று இந்தியா நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்தமாதம் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் புதுடில்லி வந்தபோது மனித உரிமை மீறல் விவகாரங்கள் குறித்து இந்தியா பிரச்சினை எழுப்பவில்லை என்றும் உண்மையான நல்லிணக்கத்தையே புதுடில்லி எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாக சொந்தமான பொறிமுறையொன்றை அமைத்துள்ள நிலையில் ஐ.நா.நிபுணர்குழு பற்றி இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவில்லை என்றும் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்புக்களின் போது வடக்கில் இராணுவ மயப்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் இயல்பு நிலையை உருவாக்குவதும் போரின் இறுதிக்கட்டத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் அறிந்து கொள்வதும் உடனடியாக கவனம் செலுத்தப்படவேண்டியவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்வு பணிகள் குறித்தும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இன்னமும் வேகமாக மீள்குடியமர்வுப் பணிகள் இடம்பெறவேண்டியுள்ளதாகவும் சிவ்சங்கர் மேனன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை.

மத்திய அரசுடன் தான் தமது தொடர்புகள் இருக்கும் என்றும் எந்தவொரு மாநில அரசு பற்றியும் தமக்கு கவலையில்லை என்றும் இலங்கை தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதாகவும் சிவ்சங்கர் மேனன் மேலும் கூறியுள்ளார். (ந-5)


மாபெரும் மலிவு விற்பனை

அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
Optima கணினிகள் மலிவு விலையில் உத்தரவாதத்துடன்

INTEL PENTIUM 4- 2.6 GHZ, 512 RAM,
40GB HDD, DVD ROM, KEYBOARD,
MOUSE

RS. 8250/= ONLY

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur

Phone :
077 832 0896
077 135 0476
077 968 9043

## த.தே.கூட்டமைப்பினருடனும்...

குழுவினிடம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் தமிழ்மக்களின் தாய கப் பிரதேசங்கள் சிங்கள பௌத்த பூமியாக திட்டமிட்டவகையில் மாற றப்பட்டு வருவது தொடர்பில் இந்திய உயர்மட்டக் குழுவினருடன் சுட்டிக் காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர்கள் அரசாங்கத்தின் இத்தகைய திட்டமிட்ட நடவடிக்கை கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்வும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற போரி னால் இடம்பெயர்ந்த வடக்குக் கிழக்கு மக்களின் உடனடித்தேவை கள் அவர்களின் வாழ்வாதார பிரச்சி னைகள் குறித்தும் இச் சந்திப்பில் இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ள னர்.

இச் சந்திப்பு ஆக்கப் பூர்வமான தாகவும் திருப்தி தரக்கூடிய வகை யிலும் அமைந்திருந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரி வித்துள்ளார். (ந-5)

## சாவகச்...

சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம் (வயது 50) என்ற குடும்பஸ்தர் சம் பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அத்துடன் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த சாவகச்சேரி சங்கத்தா னையைச் சேர்ந்த சிவபாதம் கிரிதரன் (வயது 34) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச் சைப்பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ந-5)


சகரம் தொகு
இளையோர் மாதாந்தம்
அச்சு வானொலி தொலைக்காட்சி இணைய
ஊடகக் கற்கைநெறி
4 ஆவது அணி



ஆரம்பம் ஜூன் 15 புதன்கிழமை பிற்பகல் 2 மணி
இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் அன்றைய தினம் அனுமதி பெறலாம்
MEDIA
சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, 0773 616 798

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்
சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் திருத்தம் செய்து தரப்படும்.
06, கனகசபை லேன் சிவலிங்கப்புளியடி, K.K.S.Road
0212228680, 0775925088
(5148)

மீண்டும் யாழ்.மண்ணில்...




277, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0773447100

IELTS பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் 25.06.2011 ல் நடைபெறும். பரீட்சை எடுக்க இருப்பவர்கள் எமது நிலையத்தில் 20.06.2011 ற்கு முன்னர் வந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.
CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887

ESOL Diploma in English
City & Guilds Approved Centre
City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Rayal Charter இனதும் Cambridge பல்கலைக் கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.



IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த இருப்பவர்கள் அடிப்படையில் இருந்து இந்த Diploma in English பாட நெறியைக் கற்று அதன் பின் IELTS பரீட்சையை எடுக்கலாம். 2000 Words இங்கு கற்பிக்கப்படும்.

We are pleased to announce that city & Guilds IESOL *at B2 (Communicator) and C1 (Expert) levels has been recognised as meeting the requirements of the Home Office Border and Immigration Agency's Points Based System
B2, C1, மட்டங்களில் பல மாணவர்கள் எமது கல்லூரில் பரீட்சையில் சித்தியடைந்து City & Guilds இன் சான்றிதழ்களையும் பெற்று வெளிநாடுகளிற்கு சென்றுள்ளனர்.
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

Our Lecturers
1. Mr.K.NAGARAJAN. B.A (cey) M.A (Kelaniya) TKT (Cambridge. UK)
a. 15 வருடங்கள் கிழக்குப் பல்கலைக்கழக ELTU வில் போதனாசிரியராக இருந்தவர்.
b. 20 வருடங்களுக்கு மேலாகத் திறந்த பல்கலைக்கழக வருகை தரு ENGLISH Tutor ஆக இருப்பவர்.
c. Served as a tutor for the promotion of the Quality Improvement of Teachers by Secretary for Education chaired by the State Secretary for Education.
2. Mr.J.Sahayathasan M.A (English Language) University of Sydney M.A (English Litterature) University of Sydney

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும்.
UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1,A2) மட்டுமே.
எல்லா மட்டங்களிலும் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri |
|---|---|
| Duration | 2 Months (100 hours) |
| Time | 10.30 a.m - 12.30 p.m / 2.30 p.m - 4.30 p.m |
| Commencement | 15.06.2011 |

Registration : Rs 500/= Course Fee :100 /= per hour
வகுப்புகள் 15.06.2011 ஆரம்பம்
CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887


## விழிநீரில் ஈராண்டு

| உருவில் | திதியில் |
|---|---|
| 08 | 04 |
| 10 | 06 |
| 1976 | 2009 |



**அமரர் பற்குணம் சதீஸ்குமார்**
(தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)
திதி: துவாதசி (12.06.2011)

உதித்தெழுந்த சூரியனே உடைந்தா வீழ்ந்தாய்?
ஒளி கொடுத்த விண்மதியே ஒடிந்தா சாய்ந்தாய்?
பழம் ஒன்று வீழ்ந்ததென்றால் இயற்கை என்போம்
இளமொட்டு உதிர்வதென்றால் பொறுக்கலாமோ?
சதீஸ்குமாரா சரவிளக்கே சாவா உனக்கு?
தர்தவனோ வழக்காடி எடுத்தோ போட்டான்?
உருண்டோடிக் காலங்கள் இரண்டும் போச்சு
உள்ளமிது பாவமடா காயம் ஆழம்

118/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5167)
இங்ஙனம்: கண்ணீர்க் கடலில் குடும்பத்தினர்.


DHL உத்தரவு பெற்ற முகவர்
உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
24 மணி நேரத்தில் உள்நாட்டிற்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்
London -Rs.750
Canada, U.S.A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss Rs.900
உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, CD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட



திருமுருகன் கொம்நெற்
TCN Express, 2B, Nelsan place, COlombo-06.
Customer service No.021 222 7835
இல.259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். இல.18, பிரதானவீதி, நெல்லியடி. இல.05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.